Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 13 28 - 12 - 94 புதன்கிழமை ஓசை 313

## வடபகுதிக்கு வெளியே செல்வோர் மோட்டார் ஊர்திகளை பதிவு செய்க

மோட்டார் ஊர்தி உரிமையாளர் ஒருவர் குடும்பத்தினருடன் தற்காலிகமாக வடபகுதிக்கு வெளியே செல்லும்போது தமது ஊர்தியை பாதுகாக்கும் நோக்குடன் இன்னொரு நபரிடம் கொடுத்துவிட்டுச்சென்றால், குறிப்பிட்ட நபருக்கு தனது ஊர்தியைக் கொடுத்துள்ளதாக மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவுசெய்து அதற்குரிய பற்றுச்சீட்டை ஊர்திவைத்திருக்கும் நபரிடம் கொடுத்திருத்தல்வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட ஊர்தி உரிமையாளர் வடபகுதிக்குள் வராவிடின் பாதுகாப்பதற்கென வைத்திருப்பவர் அவ் ஊர்தியை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். நிரந்தரமாக குடும்பத்தினருடன் வடபகுதிக்கு வெளியே செல்லும் ஊர்தி உரிமையாளர்கள் தமது ஊர்திகளை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் ஒப்படைத்துச் செல்லல் வேண்டும். மேற்குறிப்பிட்ட நடைமுறைக்கமைய வடபகுதிக்குவெளியே குடும்பமாகச் செல்வோரின் ஊர்திகள் மோட்டார் ஊர்திப் பதிவுச் செய (6ஆம்பக்கம்பார்க்க)

### அரசிடம் புலனாய்வுத்துறை வற்புறுத்து

# போர்நிறுத்த காலத்தில் படையணிகளின் நகர்வுகள் கண்காணிக்கப்பட வேண்டும்!

## சூனியப் பிரதேசமும் உருவாவது அவசியம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களில்-தாக்குதல்களை நோக்கமாகக் கொண்ட பாரிய படையணிகள் நகர்த்தப்படுவதை கண்காணித்தல், இருதரப்பு நிலைகளுக்கிடையில் யுத்த சூனியப் பிரதேசத்தை உருவாக்கி அதனைக் கண்காணித்தல், போக்குவரத்து பாதை தொடர்பாக இரு தரப்பாரும் நடந்துகொள்ளும் நடைமுறைகள், இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகளின் நடமாட்டம் ஆகியவை தொடர்பாக ஆராயப்பட்டு உடன்பாடு காணப்பட வேண்டுமென சிறிலங்கா இராணுவ ஆய்வாளர்களும், புலனாய்வுப் பிரிவும் அரசாங்கத்துக்கு தெரிவித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், யுத்த நிறுத்த உடன்பாடுஒன்றுகாணப்படவேண்டுமாயின் குறிப்பிட்டசிலவிடயங்களில்இருதரப்பும் இணக்கம் காணப்பட வேண்டுமெனவும் இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளது. அவற்றில்,

★ யுத்த நிறுத்தத்தின் பின் இருதரப்புப் படையணிகள் நிலை கொண்டிருக்கும் எல்லைகளுக்கிடையில்யுத்த சூனியப்பிரதேசத்தை உருவாக்குதல், இந்த யுத்த சூனியப் பிரதேசத்தைக் கண்காணிப்பதற்கு இருதரப்பும் ஒப்புக்கொள்ளும் ஒருநடுநிலையான கண்காணிப்புக் குழுவை நியமித்தல்.

★ போக்குவரத்துக்கான பாதை திறக்கப்படும் பட்சத்தில் இதில் இரு தரப்பாரும் எவ்வாறு நடந்து கொள்வது என்பதையிட்டு ஓர் உடன்பாட்டுக்கு வருதல், நிலக்கண்ணிகளை அகற்றல், புதிய நிலக்கண்ணிகளை புதைக்காமல் இருக்க உத்தரவாதம் அளித்தல்.

★ இராணுவ கட்டுப்பாட்டு

## பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள

## ரஷ்ய ஆயுதத் தரகரிடம் விமானக் கொள்வனவிற்கு முடிவு

### விமானம் ஒவ்வொன்றும் தலா 16 கோடி பெறுமதி

(கொழும்பு)

ஏ. என். 32 - பி ரக இராணுவ போக்குவரத்து விமானக் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரக் கோரலில் ஆகக் குறைந்த கேள்வித்தொகையாக 16 கோடி ரூபா தலா ஒரு விமானத்துக்கு கோரப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

கடந்த வியாழக்கிழமைபாதுகாப்புஅமைச்சில்சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஆராயப்பட்டன எல்லாமாக பதினொரு கேள்விப் பத்திரங்கள் பெறப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக் குறைந்த கேள்வித்தொகையை ரஷ்ய ஆயுதத் தரகர்கள் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் முன்னதாக 24 கோடி ரூபாவிற்கு ஒரு விமானத்தை தருவதாக சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்பந்தம் செய்திருந்தமை தெரிந்ததே.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பதவிப் பொறுப்பேற்றதும் முன்னைய அரசாங்கம் செய்திருந்த 360 கோடி ரூபா பெறுமதியான ஆயுதபேர ஒப்பந்தத்தை இரத்துச் செய்து-புதிய கேள்விப்பத்திரங்களை கோரியிருந்தார். இதன் அடிப்படையில் புதிய கேள்விப்பத்திரங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை வந்த மர்மக் கப்பலால்

## பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள ராணுவ அதிகாரிகள் பின்னடிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான இரண்டாம் கட்டப் பேச்சுகளை நடத்தச் செல்லவுள்ள அரச தரப்பு குழுவில் இடம்பெற பல இராணுவ அதிகாரிகள் பின்னடித்துள்ளதாக 'சண்டே ஒப்சேவர்' தகவல் வெளியிட்டுள்ளது.

அரச தரப்புக்குழுவில் இராணுவ அதிகாரி ஒருவரும் இடம்பெறச்செய்யும் பொருட்டு அரசு இராணுவத்தின் உயர்மட்டத்தை அணுகியது. இராணுவ கொள்கை வகுப்பாளர்களும் இதன்பொருட்டு அணுகப்பட்டனர். எனினும் பிரிகேடியர் ஒருவர் மட்டும் மனிதாபிமானரீதியில் இதற்கு முன் வந்ததாகவும் ஏனைய அதிகாரிகள் அரச தரப்புக் குழுவில் இணைய பின்னடித்துவிட்டதாகவும் 'சண்டே ஒப்சேவர்' குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் சமாதானப் போக்கை நம்பமுடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச தரப்புக் குழுவில் பிரிகேடியர் கலுப்பஹன

(கொழும்பு)

இரண்டாம் கட்டப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச தரப்புக் குழுவில் இராணுவத்தின் சார்பாக பிரிகேடியர் தெவிந்த கலுப்பஹன இடம்பெறலாம் என 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

முன்னதாக இராணுவ தரப்பில் தற்போது மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ள அசோகா ஜெயவர்த்தனா இக் குழுவில் இடம்பெற பாதுகாப்பு அமைச்சு பரிந்துரைத்திருந்தபோதிலும் அவர் கடந்த 26ஆம் திகதி

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். செல்லும் அரசகுழுவை சந்திக்க ஜனாதிபதிக்கு நேரமில்லையாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுகளுக்காக யாழ். செல்லும் குழுவைச் சந்தித்து பேசுவதற்கு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா குமாரதுங்கவிற்கு நேரம் இல்லாமல் உள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது. அண்மைக்காலமாக எழுந்துள்ள தொழிற்சங்க வேலைநிறுத்தங்களே இதற்கு காரணம் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு இக்குழுவினரை சந்திக்க ஜனாதிபதிக்கு நேரம் கிடைத்தபோது அரச குழுவைச் சேர்ந்த ஒருவர் அதற்கு சமுகமளிக்க முடியாமற்போனதாம். அனைத்து உறுப்பினர்களும் செலுலர் தொலைபேசி மூலம் அலரி மாளிகையிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டனர். எனினும் இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் மட்டும் ஜனாதிபதியை சந்தித்து பேசியபோதும் பேச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் கட்டப் பேச்சின் பின்பே யாழ்ப்பாணத்திற்கு ஜெனரேற்றர்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான மின் உற்பத்தி இயந்திரங்கள் இரண்டாம் கட்ட பேச்சுகள் முடிவடைந்த பின்னரே அனுப்பி வைக்கப்படும் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மின்சாரத்தை விநியோகிக்கும் நோக்குடன் இரு இராட்சத மின் உற்பத்தி இயந்திரங்களை அனுப்புவதற்கான ஆயத்தங்கள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந் நடவடிக்கை பற்றி அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் வெற்றியைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

நிலக்கண்ணிகளை புதைக்காமல் இருக்க உத்தரவாதம் அளித்தல்.

★ இராணுவ கட்டுப்பாட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பதவி விலக பணிப்பு

தற்போது பதவியிலுள்ள ஐந்து மாகாணங்களின் ஆளுநர்களையும் எதிர்வரும் 31-ந் திகதிக்கு முன்னர் ராஜினாமா கடிதங்களைக் கையளிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணிப்பு விடுத்துள்ளார்.

இவர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

### சந்திரிகாவை சந்திக்க
## ஜே.ஆர். விருப்பம்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா எதிர்வரும் புதுவருடத்தின் முதல் வாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்திப்பதற்கு தான் தயாராக இருப்பதாக ''லங்கா தீப'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா
### மாலைதீவு பயணம்

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவும் அவரது இரு பிள்ளைகளும் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு மாலைதீவுக்குச் சென்றுள்ளனர்.

நேற்றுமாலை அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு பயணமாகியதாக ரூபவாஹினி தெரிவித்தது.

## திருமலை வந்த மர்மக் கப்பலால் துறைமுகப் பகுதியில் பதற்றம்

(கொழும்பு)

கடந்த ஏழாந்திகதி திருகோணமலைத் துறைமுகத்திற்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கப்பலால் துறைமுக அதிகாரிகளும் கடற்படையினரும் பரபரப்பிற்குள்ளாயினர்.

ஆயிரம் தொன் நிறையுடைய இக்கப்பல் திருமலை துறைமுகம் நோக்கி வந்தபோதிலும் துறைமுகத்திற்கு அப்பாலுள்ள நடுக்கடல் பகுதியில் நங்கூரமிட்டுத் தரித்திருந்தது. இக்கப்பலில் இருந்து எப்பொருட்களும் இறக்கப்படவில்லை. கப்பலில் எந்தப் பொருட்களும் ஏற்றப்படவும் இல்லை. கப்பலில் இருந்ததான தொலைத் தொடர்புகளும்குறைவாகவே இருந்தன.

இதனால் துறைமுக அதிகாரிகள்இக்கப்பல் விடுதலைப் புலிகளினுடையதோ என சந்தேகம் கொள்ள ஆரம்பித்தனர். கேந்திர முக்கியத்துவமிக்க தனது தளம் அருகே மர்மக் கப்பல் பல நாட்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்த, நீலன் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தேசியப்பட்டியல் எம். பி. நீலன் திருச்செல்வம் ஆகியோருக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவ புலனாய்வுத் தகவல்களை தொடர்ந்து இந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களை கவராத இராணுவம் பெரும் நெருக்கடிக்குள்ளாகும்

### சண்டே. ஐலண்டில் தராக்கி

(கொழும்பு)

மூன்றாம் உலக நாடு ஒன்றின் இராணுவம் பொதுமக்களின் கவனத்தை கவர தவறும்போது அது பெரும் நெருக்கடிக்குள்ளாகும். இது இராணுவத்தினுள் சர்ச்சைகளை ஏற்படுத்துவதோடு இராணுவத்தினரிடையே உறுதி குலைப்பதாக அமைந்துவிடுகிறது இது இராணுவ ஆட்சேர்ப்பை பாதிப்பதாகவும் போய்விடும். இத்தகைய ஓர் நிலையை ஏற்படுத்துவதிலேயே பிரபாகரன் போன்ற நுட்பத்திறன் உள்ள இராணுவத்தலைவர்கள் அக்கறையாக இருப்பார்கள். இவ்வாறு சண்டே ஐலண்டில் அதன் அரசியல் விமர்சகர் தராக்கி குறிப்பிட்டுள்ளார்.

இராணுவவரலாற்றையோ விதிமுறைகளையோ ஆழமாக நோக்குபவர்கள் மரபுவழி ரீதியில் போரிடும்இராணுவம் இதன் சக்தியை படிப்படியாக இழந்துவந்திருப்பதை அவதானிக்க முடியும் என்றும் தராகி அதில் குறிப்பிட்டுள்ளார்.

## எமக்காக யுத்தம் செய்த இந்தியாவை பிரேமதாசா திருப்பி அனுப்பியது தவறு

### முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

எமக்காக இந்திய இராணுவம் யுத்தம் செய்தது. அக்காலத்தில் அது எமக்கு பெரிய உதவியாக இருந்தது. இந்த நிலையில் இந்திய இராணுவத்தை பிரேமதாசா திருப்பி அனுப்பியது மிகவும் தவறு என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 'ராவய' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு அழைக்கப்பட்டது சரியா என கேட்கப்பட்டபோது அது மிகவும் சரியானது. இந்தியா அக்காலத்தில் எமக்கு மிகவும் உதவியாக இருந்தது. யுத்தத்திற்காக யாரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**சிங்கர் தையல் இயந்திரங்கள்**

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி கிளிநொச்சியில் எமது சேவையை ஆரம்பிக்கின்றோம்

புதிய பழைய தையல் இயந்திரங்கள் உதிரிப் பாகங்கள் திருத்த வேலைகள் அனைத்திற்கும் சிங்கர் தையல் இயந்திர நிலையம், கிளிநொச்சி. (10512)

**ஒப்படைக்கவும்**

25-12-94 அதிகாலை கிளாலியில் உடைகளும் புகைப்பட அல்பமும், அடங்கிய பயணப் பொதி கைமாறி விட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் யாழ். பஸ் நிலைய கிளாலிச் சேவை அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (10511)

**நத்தார் பண்டிகையை இனிமையாக கொண்டாடுங்கள்**

தரமான வான் கோழிகள், இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (சி- 11019)

**இரும்புத்தகடு விற்பனைக்கு**

நெல்குற்றும் ஆலைகள் மற்றும் தொழில் துறையில் பயன்படுத்தக்கூடிய - 8 அடி × 4 அடி × $\frac{1}{2}$ அங்குலம் கனமுள்ள இரும்புத்தகடு விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' [சி-11024]

**தவறிவிட்டது**

23-12-94 8.30 மணியளவில் நல்லூரில் (கிளாலி) ரக்ரரில் பிரயாணம் செய்யும் பொழுது தவறவிடப்பட்ட அடையாள அட்டை இல:- 685062216V - ம் பெறுமதிவாய்ந்த பொருட்களும் கண்டெடுத்தவர்கள் திரும்ப ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சோபிதா பல்பொருள் நிலையம் 395 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (10517)

**ஓடர் செய்து வாங்க**

சிறுவர், பெரியோர்க்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி, பிளவுஸ் அண்சளுக் [illegible]

# மலத்தியோன் தெளிக்கும் நடைமுறை நுளம்பை கட்டுப்படுத்த உதவாது

**- விரிவுரையாளர் நிஷங்க டி சில்வா**

(கொழும்பு)

மலத்தியோன் மருந்து தெளிக்கும் தற்போதைய நடைமுறையினால் நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியாது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜெயவர்தனபுர பல்கலைக் கழக விரிவுரையாளரான நிஷங்க டி சில்வா இது குறித்து கருத்து வெளியிடுகையில், நுளம்புகள் பெருகும் கால வேறுபாட்டை அறிந்து அவை கூடுதலாக பரவும் காலப்பகுதியில் மலத்தியோன் தெளிப்பதே கூடிய பயனை அளிக்கும் என தெரிவித்துள்ளார்.

வட கிழக்கு பருவப் பெயர்ச்சி காலத்திலும், மே, ஜூன் மாதங்களிலும் நுளம்புப் பெருக்கம் உச்ச நிலையை அடைந்திருக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிகச் செயலரும், உள்துறைப் பிரதிச் செயலருமான அமரர் சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் அவர்களின் 31-ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெற இருக்கிறது. (21)

## இடமாற்றம் 28-12-94

# கல்யாணி தங்கமாளிகை

இல 189A சந்தோசம் தெரு யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த மேற்படி வாணிப நிலையம் இன்று முதல் இல 185/2 சந்தோசம் தெரு முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம்.

அ. அன்ரன் யேசுதாசன்

[10521]

## இறந்தவர் குடும்பத்திற்கு 70ஆயிரம் வழங்க உத்தரவு

([illegible])

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது தொல்புரம் மத்தி மூட்டடியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் மினிபஸ் விபத்து ஒன்றில் சிக்கி மரணமானவரின் குடும்பத்தாருக்கு எழுபது ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். கிளாலி சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் ஒன்று இந்த வருடம் மாசிமாத முற்பகுதியில் நாவற்குழிப் பகுதியில் விறகுக் கட்டுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மேற்குறித்த காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஆசைப்பிள்ளை நடராசா (வயது 47) என்பவருடன் மோதியதால் பரிதாபகரமான முறையில் பலியானார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினர் மினிபஸ் சாரதியை தமிழீழ மாவட்ட நீதிமன்றின் நீதியாளர் முன்னிலையில் ஆஜர் செய்ததையடுத்து நீதிமன்றில் நடைபெற்ற விசாரணையின் போது மினிபஸ் சாரதி குற்றவாளியாக காணப்பட்டு இறந்தவரின் குடும்பத்துக்கு இழப்பீடாக எழுபது ஆயிரம் ரூபா செலுத்துமாறு மன்று தீர்ப்பளித்துள்ளதாக இறந்த நபரின் குடும்பத்தினர் எமது செய்தியாளருக்கு தெரிவித்தனர். (41)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பு நடேஸ்

(கொடிகாமம் கண்ணன் கூல்பார் உரிமையாளர்)

## பிற்போடப்பட்டுள்ளது

எழுது மட்டுவாள் சிறிகணேசா சனசமூக நிலையத்தின் நூலக வளர்ச்சிக்கான 28-12-94 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாதகாரணத்தினால் 1-02-95 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

- நிர்வாகம்

(சி-11025)

யா/உடுவில் தமிழீழ பாடசாலைச் சேவை

## பாராட்டுகின்றோம்

யா / உடுவில் தமிழீழ பாடசாலைச் சேவையில் பிரயாணம் செய்யும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான; [illegible]

## நினைவு கூருகின்றோம்...

### 28.12.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - இறக்கக்கண்டிப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**கோணேஸ்** (பொன்னுத்துரை கௌரிமலர் - பன்குளம் - திருமலை)

**லோகன்** [பொன்னுத்துரை உதயகுமார் - பன்குளம் - திருமலை]

**மைக்கல்** (சண்முகம் சுப்பிரமணியம் - 10-ம் கட்டை சாம்பல்தீவு - திருமலை]

1989 ம் ஆண்டு வவுனியா - நெளுக்குளம் பகுதியில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சுதர்சன்** [வே. ஆறுமுகநாதன்- திருமலை]

**சாள்ஸ்** ( - ஜெகதீஸ்வரன் - கணுக்கேணி, முள்ளியவளை - முல்லைத்தீவு)

**2-ம் லெப். சீலன்** (பரஞ்சோதிராசா உமாகாந்தன் - குலசிங்கம் வீதி - துணுக்காய்)

முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பெரியண்ணை - ரீகன்** ( தங்கத்துரை பரமலிங்கம் - தண்ணீரூற்று - முல்லைத்தீவு)

**லெப். அமுதாப்** (பிரான்சிஸ்திரேஸ் பத்மநாதன் - சிலாவத்தை - முல்லைத்தீவு)

**றிச்சாட்** (கோவிந்தசாமி அசோக்குமார் -வாரிக்குட்டியூர் வவுனியா]

**சுசீலன்** [பரந்தாமன் மங்களேஸ்வரன் - இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

**வேந்தன்** [வை. செல்வநாயகம் -சின்னத்தம்பனை, நேரியகுளம் - வவுனியா)

**கங்கை** (நடராசா ராஜேஸ்வரன் - கணேசபுரம் - கிளிநொச்சி)

**தனம்** (வடிவேல் சிவபாலன் - மானிப்பாய் வீதி - யாழ்)

**இவான்** (லோகேஸ்வரன் மனோகரன் பிரதான வீதி, சங்கானை - யாழ்)

**அருள்** [நா. நாகராசா - )

யாழ் -கொடிகாமம் பகுதியில் தேசவிரோதிகளினால் தனது வியாபார நிலையத்தின் முன்னால் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான.

**தம்பு நடேசு** (கச்சார்வெளி - பளை)

இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**பாலா** (இருபாலை)

1990-ம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பாலா** (இராசையா தவனேசன் - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு - யாழ்)

மன்னார் -நானாட்டான் பகுதியில் வங்காலை முகாமிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கெனட்** [பாக்கியராசா அன்ரனி பேனாட் - பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்துமருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அசோகா** (இந்திரகுமாரி சிவகுரு - புலோலி மேற்கு - பருத்தித்துறை)

மட்டு - சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

[illegible]

சிறுவர், பெரியோர்க்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி, பிளவுஸ் ஆண்களுக்கான ரவுஸர், சேட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள். தொடர்பு:- சிற்றி காமன்ஸ் பலாலி வீதி திருநெல்வேலி, கிளை; 'சிவபதி' இணுவில்.

[சி- 11029]

## தொடர்புகொள்ளவும்

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞானமன்றத்தினர் (எஸ். எஸ்.யூ) நாடகக் கலைஞர் திரு.சி. ஜெயசங்கரின் நெறியாள்கையில் சிறந்த நாடகமொன்றினை உருவாக்க உள்ளனர். இதில் பங்கேற்க விரும்பும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சமூகவிஞ்ஞான மன்ற செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [05]

## இன்று ஒளி விழா

(நவாலி)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் நலன்புரிச் சங்கத்தினரின் ''ஒளிவிழா'' நிகழ்ச்சி இன்று (28-12 94) பிற்பகல் 1 மணியில் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளரும் நிர்வாக உத்தியோகஸ்தருமான செ. தர்மலிங்கம் அவர்களால் நடாத்தப்படவுள்ளது.

தலைமையுரை பிரதேச செயலர் து. வைத்திலிங்கமும் ஜெபவழிபாட்டை மானிப்பாய் பங்குத்தந்தை ஏ.ஜேயாவிஸ் அடிகளாரும், ஆனைக்கோட்டை பங்குத்தந்தை ப. பி. பொனிபேஸ் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர்.

தென்னிந்திய திருச்சபை ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசனும் அருட்தந்தை ஏ. எவ். பெனற் அடிகளாரும் கிறிஸ்மஸ் செய்தியினை வழங்கவுள்ளனர்.

(05)

---

அமரர் தம்பு நடேசு

(கொடிகாமம் கண்ணன் கூல்பார் உரிமையாளர்)

மலர்வு 5- 5- 1950 — தேசத்துரோகிகளால் அழிப்பு 28- 12- 1989

### திதி: 2- 1- 1995

அன்பான குடும்ப தலைவனாய்
பாசமுள்ள அப்பாவாய் எம்மை
வழிநடத்திய தெய்வமே!
அரக்கரின் அழிப்பில் நிகழ்ந்தது பிரிவு
இன்று எம்மை வழி நடத்துவது
உங்கள் நினைவுகள் மட்டுமே.

பறிகொடுத்து பரிதவிக்கும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்

கச்சார்வெளி
பளை.

[10518]

---

## 2-ம் வருட நெஞ்சவருடல்



பிறப்பு 25- 07- 1976

வீரச்சாவு 28- 12- 1992

## லெப். நீலவண்ணன்

### கிறேஷியன் ஜேம்ஸ் (ஆனந்)

'உன் அருகில் ஆயிரம் விழட்டும்
உன் வலது பக்கத்தில் பத்தாயிரம்
விழட்டும் உன்னை எதுவும் அணுகாது'

இவரின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய்,
சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

19, 1-ம் குறுக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(10513)

---

யா/உடுவில் தமிழீழ பாடசாலைச் சேவையில் பிரயாணம் செய்யும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான:

**சுரேக்கா மதன சுரேந்திரன்**
**கார்த்திகா சண்முகநாதன்**

ஆகியோர் எட்டாம் ஆண்டு தமிழீழ இளநிலைத் தேர்வில் 8D களைப் பெற்றமை குறித்துப் பாராட்டுகின்றோம்.

4-1-1995-ம் திகதியில் இருந்து தமிழீழ பாடசாலை சேவை ஆரம்பமாகும் என்பதை இணுவில் உடுவில், கொக்குவில், கோண்டாவில் மாணவிகளுக்கு அறியத் தருகிறோம்.

உரிமையாளர்
க. செல்வரட்ணம்
[உடையார்]

[10520]

---

கலைக்கல்லூரியின் வளர்ச்சி நிதிக்காக தீவகக் கோட்ட விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்பினர் நடாத்தும்

## மாபெரும் கலை நிகழ்ச்சி

நிகழ்வு:

★ மாவீரர் புகழ்பாடுவோம் (பரதம்)

★ தம்பாட்டி காந்திஜி நாடக மன்றத்தினரின்
பண்டார வன்னியன்
(தென்மோடி நாட்டுக் கூத்து)

★ தீவகக் கலைஞர்களின்
விடியலைத்தேடி (நாடகம்)

காலம்:- 28.12.1994 இன்று பி.ப. 7.30மணி
இடம்:- யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி

நுழைவுக் கட்டணம் 10/- மட்டுமே

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வி. பு. க. ப. க.
மகளிர் அமைப்பு
தீவகம்

(10519)

---

இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**கௌரி / செல்வராஜ்** (கருவேப்பங்கேணி-மட்டு)

மட்டு - ஏறாவூர், ஐயங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு பலியான நாட்டுப் பற்றாளரான,

**சி. நிதி** (மட்டு)

**க. பீதாம்பரம்** (மட்டு)

1992-ம் ஆண்டு திருமலை - கந்தளாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் தமிழேந்தி / கோபி** (கதிரவேலுப்பிள்ளை காளியப்பு - தம்பலகமம் - திருமலை)

**கப்டன் விபுலன் / தோன்றல்** (வேலாயுதம் பரமேஸ்வரன் - கந்தளாய் - திருமலை)

**லெப். மண்டலோ / பொற்கைமாறன்** [முருகையா முரளி - சந்திபுரம், பன்குளம் - திருமலை]

தெல்லிப்பழை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். நீலவண்ணன்** [கிறேசியன் ஆனந் - குருநகர் - யாழ்]

**2-ம் லெப். நாவல்லவன் / பிரதீப்** [தர்மலிங்கம் சுரேஸ் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்]

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-11023]

---

## மண்ணெண்ணெய் விநியோகம்

29-12-1994முதல் 30-12-1994வரை இதுவரை மண்ணெண்ணெய் எடுக்காத மாணவர்களுக்கு முன்பு குறிப்பிட்டளவு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

இது இவ்வருடத்தின் இறுதி மண்ணெண்ணெய் விநியோகம் ஆகையால் மிகுதியாகவுள்ள எண்ணெய் 31-12-1994 அன்று அனைத்து மாணவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பிரித்து வழங்கப்படும்.

நேரம்:- பி. ப. 1 மணி - 5 மணி வரை

மாணவர் அவை,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(10516)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# விஞ்ஞானம் O/L

## அடிப்படை விஞ்ஞானம் தொடர் II

### வளி

01) வளி ஒரு சடப்பொருளா? உமது விடைக்கான காரணங்களைத் தருக?
02) வளி சடப்பொருளின் எவ்வகையில் அடங்கும்?
03) வளியின் கூறுகளைத் தருக?
04) வளியில் உள்ள கூறுகளை அவற்றின் விகித அடிப்படையில் ஏறுவரிசையாக எழுதுக?
05) வளியில் மாறுபடும் வீதத்தில் காணப்படும் கூறு எது?
06) வளி, காற்று இரு நிலைகளிலும் காணப்படும் வேறுபாட்டைத் தருக?
07) வளி பயன்படும் சந்தர்ப்பங்களைத் தருக?
08) வளியில் 1/5 பங்கைப் பயன்படுத்தி நடைபெறக் கூடிய செயற்பாடுகள் மூன்று தருக?
09) வளியில் ஒட்சிசன் செறிவைக் கூட்டும் செயற்பாடு எது?
10) வளியில் $CO_2$ செறிவை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகளைத் தருக?

### மண்

11) மண் எவ்வாறு உண்டாகின்றது?
12) மண்ணின் கூறுகளைக் கூறுக?
13) அக்கூறுகளில் பாரம் கூடிய கூறு எது? பாரம் குறைந்த கூறு எது?
14) மண்ணை உண்டாக்க வழி செய்யும் காரணிகளைத் தருக?
15) மண்ணில் உள்ள பிற கூறுகளைத் தருக?
16) மண்ணில் காணப்படும் நீர் வகைகளைத்தருக?
17) எவ்வகையான மண்ணீரைத் தாவரம் உள்ளெடுக்கும்?
18) மண்ணரிப்பு என்றால் என்ன?
19) மண்ணரிப்புக் காரணிகளைத் தருக?
20) மண்ணரிப்பால் ஏற்படும் தீமைகளைத் தருக?
21) மண்ணரிப்பைத் தடை செய்ய மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளைத் தருக?
22) மண் வகைகளைத் தருக?
23) அவற்றில் நுண்ணிய துணிக்கைகளைக் கொண்ட மண் வகை எது?
24) நீரடக்கம் கூடிய மண் வகையையும் நீரடக்கம் குறைந்த மண் வகையையும் தருக?
25) வளியடக்கம் கூடிய மண் எது? வளியடக்கம் குறைந்த மண் எது?
26) பயிர்ச் செய்கைக்கு சிறந்த மண் எது? காரணம் தருக?
27) மண்ணை மூலப்பொருளாகக் கொண்டு செய்யப்படும் கைத்தொழில்களைத் தருக?
28) மணல் மண்ணை எவ்வாறு பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக்குவீர்?
29) மண்ணை அதிகம் சூடாக்கும்போது வெளியேறும் மண்ணீர் எது?
30) விரல்களுக்கிடையில் எடுக்கும்போது சொரு சொருப்பாக காணப்படும் மண் வகை எது?
31) நிறமற்ற, மணமற்ற வாயுக்கள் எவை?
32) நிறமற்ற மணமுள்ள வாயுக்கள் எவை?
33) நிறமுடைய வாயுக்கள் எவை?
34) சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக்கும் வாயுக்கள் எவை?
35) அமில இயல்புடைய வாயுக்கள் எவை?
36) கார இயல்புடைய வாயு எது?
37) உலோகங்களின் இயல்புகளைத் தருக?
38) அலோகங்களின் இயல்புகளைத் தருக?
39) அமிலங்களின் இயல்புகளைத் தருக?
40) காரங்களின் இயல்புகளைத் தருக?
46) அலோகங்கள் 10 தருக?
47) துருப்பிடித்தலுக்குத் தேவையான நிபந்தனைகளைத் தருக?
48) துருப்பிடித்தலைக் கூட்டும் காரணிகள் எவை?
49) துருப்பிடித்தலைத் தடுக்கும் காரணி எது?
50) துருப்பிடித்தலைத் தடை செய்ய பயன்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைத் தருக?

### விடைகள்

01) ஆம், திணிவும் கனவளவும் காணப்படுவதனால் அது ஒரு சடப்பொருள்
02) கலவை
03) நைதரசன் ஒட்சிசன் சடத்துவ வாயுக்கள் காபனீரொக்சைட்டு, நீராவி
04) $N_2$ – 78% $O_2$ 20-21% சடத்துவவாயுக்கள் 1% $Co_2$ 0. 03%
05) நீராவி
06) வளி அசையாது காற்று அசையும்
07) (1) சுவாசம், தகனம் என்பனவற்றிற்கு ஒட்சிசனை வழங்க
(2) காற்றாலை மூலம் வேலைசெய்ய
(3) பாய்க்கப்பலைச் செலுத்த
(4) தானியங்களைத் தூற்ற
08) தகனம், சுவாசம், துருப்பிடித்தல்
09) ஒளித் தொகுப்பு
10) தகனம், சுவாசம்
11) கற்பாறைகள் சிதைந்து தூளாவதனால் மண் உண்டாகுகின்றது
12) கஞ்சல், தொங்கல், அடையல், களிமண், சிறுமணல், பெருமணல், பரல்
13) பாரம் கூடியது பரல் குறைந்தது கஞ்சல்
14) (1) ஓடும்நீர் (2) வீசும் காற்று (3) வெப்பமான நேரத்தில்மழை பெய்தல் (4) தாவரவேர் வளரல் (5) கற்குழிகளில் நீர்உறைதல்
15) வளி, நீர், நுண்ணங்கி
16) புவியீர்ப்பு நீர் (சுயாதீனநீர்)
மயிரிழை நீர்
பருகு நீர்
17) மயிரிழை நீர்
18) ஓரிடத்தில் உள்ளமண் வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படல்
19) காற்று, நீர், விலங்கு
20) 1) மண்வளம் குன்றல்
2) தரை பள்ளமாதல்
3) தாவரங்கள் பாறிவிழல்
4 மண்சரிவு ஏற்படல்
21) 1) மூடுதாவரங்களை வளர்த்தல்
2) காற்றுத் தடை வேலிகளை அமைத்தல்
3) சரிவான இடங்களில் படிமுறை பயிர் செய்தல்
4) தரையில் கற்களை அடுக்கிவிடல்
22) மணல், மண், களிமண், நன்மண் (இருவாட்டி/தோட்டமண்)
23) களிமண்
21) நீரடக்கம் கூடியமண் – களிமண்
நீரடக்கம் குறைந்தமண் – மணல்மண்
25) வளியடக்கம் கூடியது – மணல்மண்
வளியடக்கம் குறைந்தது – களிமண்
26) நன்மண் : தாவரவளர்ச்சிக்கு தேவையான அளவு வளியையும் நீரையும் கொண்டிருப்பதனால்
27) மட்பாண்ட கைத்தொழில், கண்ணாடி, பீங்கான், சீமெந்து
28 உக்கல் கலந்து நீரடக்கத்தை கூட்டுதவதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக்கலாம்.
29) பருகுநீர்
30) மணல்மண்
புரோமீன் - செங்கபிலம்
புளோறீன் - சிவப்பு
34) $Co_2$ , $So_2$
35) $Cl_2$, $Co_2$, $2So_2$
36) $NH_3$
37) 1) பளபளப்பானவை
2) மின் வெப்பத்தைக்கடத்தும்
3) நிலத்தில் விழும்போது நாணயம் விழும் ஒலியைக் கொடுக்கும்
4) அடித்தால் நொருங்காது தகடாகும்
5) இலத்திரன்களை இழந்து (நேரயனைக் கொடுக்கும்)
38) 1] பளபளப்பற்றவை
2] மின் வெப்பத்தைக் கடத்தாது [காபன்தவிர]
3] நிலத்தில் விழும் போது நாணயம் விழும் ஒலியைக்கொடுக்காது.
4] இலத்திரனை ஏற்கும் அல்லது பங்கிடும் (தாக்கத்தில் ஈடுபடாதவையும் அடங்கும்)
39) 1) புளிப்புச் சுவையுடையது
2) நீலப்பாசிச் சாயத்தாளைச் சிவப்பாக்கும்
3) PH பொறுமானம் 7லும் குறைவு
4) உலோகங்களுடன் தாக்கமடைந்து ஐதரசனைக் கொடுக்கும்
5) காபனேற்றுக்களுடன் தாக்கமடைந்து $Co_2$ வைக் கொடுக்கும்
40) 1) கசப்புச்சுவை உடையது
2) செம்பாசிச் சாயத்தாளைநீலமாக்கும்
3) PH பெறுமானம் 7லும் கூட
4) நீரில் நனைத்து விரல்களில் எடுத்தால் சவர்க்காரம் போல வழு வழுக்கும்
41) 1) ஐதரோக்குளோறிக்கமிலம் - Hcl 2) சல்பூரிக்கமிலம் $H_2So_4$ 3) நைத்திரிக்கமிலம் $HNo_3$
4) அசற்றிக்கமிலம் $CH_3COOH$
42) பழப்புளி - தாத்தாரிக்கமிலம்
தேசிக்காய் - சித்திரிக்கமிலம்
வினாகிரி - அசற்றிக்கமிலம்
43) சாம்பல், சலவைச்சோடா, சவர்க்காரம், சுண்ணாம்பு மகனீசியப்பால்
44) நீர், கறியுப்பு
45) சோடியம், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், நாகம், இரும்பு, செப்பு, வெள்ளி, இரசம், ஈயம்
46) காபன், கந்தகம், பொசுபரசு, ஐதரசன், நைதரசன், ஒட்சிசன், குளோறீன், சிலீக்கன், புளோறீன், நேயன்
47) ஒட்சிசன் (வளி) நீர்
48) அமிலம், உப்பு
49) காரம்
50) 1) எண்ணெய்பூசல் கிறீஸ்பூசல் (ஆயுதங்களிற்கு)
2) மைப்பூச்சு பூசல் (அழகை விரும்பும் பொருட்களிற்கு)
3) முலாமிடல்

## தொடர் I

## விஞ்ஞான விளக்க விடைகள்

01) விலங்கு உயிர் வாழ்வதற்கு உணவும், ஒட்சிசனும் அவசியமானவையாகும். பச்சையம் உள்ள தாவரங்களே உணவைத் தொகுத்து வழங்குகின்றன. அத்துடன் அவை $O_2$ வையும் வளி மண்டலத்தில் விடுவதனால் விலங்குகள் வாழ வசதியாக இருக்கும். பச்சைத் தாவரம் அற்ற தொகுதியில் இவை கிடைக்கப் பெறாமையால் விலங்கினம் அழிந்து விடும்.

02) தூயநீர் சுவையற்றது. எமது கிணற்று நீரில் கனியுப்புக்கள் காணப்படுவதனால் அது ஒரு சுவையைக் கொண்டிருக்கும். கிணற்று நீரை கொதிக்க விடும்போது கரைதிறன் குறைந்த உப்புக்கள் நீரில் இருந்து அகற்றப்படுவதனால் நீர் சுவையற்றுப் போகிறது.

03) வாழைக்காயில் மாப்பொருளும், வாழைப்பழத்தில் வெல்லமும் உண்டு. வெல்லம் இனிய சுவையுடையதாகும்எனவேவாழைப்பழம்இனிக்கிறது.

04) கரிய உலோகம் சிறந்த வெப்பக்கதிர் வீசியாகும். தான் பெற்ற வெப்பத்தை விரைவில்

...ய்வு குறைவாகையால் நாம் சமநிலையில் நடமாட முடிவதில்லை.

06) கட்டை மரத்தில் உள்ள தேங்காயிலும் உயர்ந்த மரத்தில் உள்ள தேங்காயில் அழுத்தசக்தி கூடவாகையால் அதன் பாதிப்பு கூடவாகக் காணப்படுகிறது.

07) இரசாயன வளமாக்கி தொடர்ந்து பயன்படுத்தும்போது மண்ணின் PH பெறுமானம் மாறுவதனாலும் நுண்ணங்கிகள் அழிவதனால் மண்ணில் சேதனப் பொருட்கள் உக்க முடியாது போவதனால் மண்ணின் வளம் குன்றும்.

08) திண்மங்கள் வெப்பத்தால் விரிவடையக் கூடியது. ஆகையால் கோடை காலத்தில் வெப்பம் காரணமாக மின்சாரக் கம்பி விரிவடைந்து அதன் நீளம் கூடுவதனால் தொய்கிறது.

09) வெள்ளைக் கண்ணாடி வெள் ஒளியில் உள்ள ஏழு நிறங்களையும் தன்னூடாகச் செல்லவிடும் இதனால் ஏழு கதிர்களின் வெப்ப விளைவும் கண்ணில் ஏற்படும் நிறக் கண்ணாடி தனது நிறத்துக்குரிய நிறத்தை மட்டும் செல்ல விடுவதனால் கண்ணில் படும் ஒளிக் கதிர்களின் எண்ணிக்கை குறைய வெப்ப விளைவு குறையும். இதனால் நிறக் கண்ணாடி அணியும்போது குளிர்ச்சியாக உள்ளது.

10) உடலில் வியர்வை உள்ளபோது காற்று வீசினால் ஆவியாதல் வீதம் கூடும். ஆவியாவதற்குரிய வெப்பத்தை உடலில் இருந்து பெற உடல் வெப்பநிலை குறைய குளிர்கிறது.

11) அதிகாலையிலும், மாலையிலும் சூரியன் தூரத்தில் நிற்பதனால் கூடிய தூரம் செல்லக் கூடிய அதாவது அலை நீளம் கூடிய சிவப்பு நிறக்கதிர் பூமிக்கு வர அவை முகில் கூட்டங்களில் படும்பொழுது சிவப்பாகத் தோன்றுகிறது.

12) நைதரசனைக் கொண்ட பொருளுடன் காரத்தை சேர்த்து வெப்பப்படுத்த நைதரசன் பிரிகை அடைந்து வெளியேறும் எனவே காரத் தரைக்கு நைதரசன் வளமாக்கியை இட்டால் நைதரசன் வெளியேறி விடுவதனால் நைதரசன் வளம் குறைந்து விடும். எனவே காரத்தரைக்கு நைதரசன் வளமாக்கி இடக் கூடாது.

13) உணவுடன் அதிக நீர் பருகும்பொழுது நொதியங்கள் ஐதாக்கப்பட தாக்கியின் செறிவு குறைந்து தாக்க வீதம் குறையும். இதனால் சமிபாடு அடைய நீண்ட நேரம் எடுக்கும் எனவே உணவுடன் அதிக நீர் பருகக் கூடாது.

சு. அருள்நேசன்

14) கிரிக்கெட் வீரர் நீண்ட நேரம் சூரிய ஒளியில் நிற்க வேண்டியுள்ளது. வெண்ணிறம் எல்லா நிறக் கதிர்களையும் தெறிக்கச் செய்வதனால் உடலில் வெப்ப விளைவு குறைவாக இருக்கும். எனவே வெண்ணிற ஆடை அணிகிறார்கள்.

15) நொதித்த கள்ளில் உள்ள எதையில் அற்ககோல் ஒட்சியேற்றப்பட்டு அசற்றிக் அமிலமாக மாறும். அமிலம் புளிப்புச் சுவையுடையது. எனவே நொதித்த கள்ளு வெறிக்கின்றது.

16) வீட்டு முற்றத்தில் புற்கள் இல்லாதுவிடின் முற்றத்தில் படும் சூரியக் கதிர்கள் தெறிப்படைந்து எமக்கு படும். புற்கள் காணப்பட்டால் அவை சூரியக்கதிர்கள் சிலவற்றை உறிஞ்சி குறைந்த அளவையே தெறிக்கச் செய்யும் இதனால் குளிர்ச்சியாக இருக்கும்.

17) நீர் பனிக்கட்டியாகும்பொழுது கனவளவு அதிகரிக்க அடர்த்தி குறைவதனால் நீரில் மிதக்கின்றது.

18) நீர் ஓர் அரிதிற் கடத்தி. தான் பெற்ற வெப்பத்தை விரைவில் இழக்காது. சூழல் வெப்பநிலை அதிகாலையில் குறைவாக இருந்தாலும் நீரின்

... இயல்புடைய வாயு எது?
37) உலோகங்களின் இயல்புகளைத் தருக?
38) அலோகங்களின் இயல்புகளைத் தருக?
39) அமிலங்களின் இயல்புகளைத் தருக?
40) காரங்களின் இயல்புகளைத் தருக?
41) ஆய்வுசாலையில் காணப்படும் 4 அமிலங்களைத் தருக?
42) வீட்டிலுள்ள அமிலப் பொருட்களைத் தருக?
43) வீட்டிலுள்ள காரப் பொருட்களைத் தருக?
44) வீட்டிலுள்ள நடுநிலையான பொருட்களைத் தருக?
45) உலோகங்கள் 10 தருக?

28 உக்கல் கலந்து நீரடக்கத்தை கூட்டு தவதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக்கலாம்.
29) பருகுநீர்
30) மணல்மண்
31) ஒட்சிசன், ஐதரசன், காபனீரொக்சைட்டு
32) அமோனியா — மூக்கை அரிக்கச் செய்யும் மணம்
கந்தக வீரொக்சைட்டு - மூச்சைத் திணறச் செய்யும் மணம் (எரியும் கந்தக மணம்)
ஐதரசன் சல்பைட் - கூழ் முட்டை மணம்
33) குளோரீன் - பசிய மஞ்சள்
நைதரசனீர் ஒக்சைட்டு - கபிலம்

03) வாழைக்காயில் மாப்பொருளும், வாழைப்பழத்தில் வெல்லமும் உண்டு. வெல்லம் இனிய சுவையுடையதாகும்எனவேவாழைப்பழம்இனிக்கிறது.
04) கரிய உலோகம் சிறந்த வெப்பக்கதிர் வீசியாகும். தான் பெற்ற வெப்பத்தை விரைவில் இழந்து விடும். எனவே கரிய உலோகம் சிறந்ததல்ல பளபளப்பான மேற்பரப்பு வெப்பக்கதிர் வீசும் இயல்பு குறைவாகையால் விரைவில் ஆறாது அதிகநேரம் பயன்படுத்தலாம் என்பதனால் மினுமினுப்பான உலோகமே சிறந்தது.
05) நாம் சமநிலையில் நடமாட உராய்வு அவசியமாகும். எண்ணெய் ஊற்றிய தளத்தில் உரா

... கரிக்க அடர்த்தி குறைவதனால் நீரில் மிதக்கின்றது.
18) நீர் ஓர் அரிதிற் கடத்தி. தான் பெற்ற வெப்பத்தை விரைவில் இழக்காது. சூழல் வெப்பநிலை அதிகாலையில் குறைவாக இருந்தாலும் நீரின் வெப்பநிலை கூடவாகையால் அது சுடுகின்றது.
19) புற்கள் பச்சையாகக் காணப்படுவதற்கு பச்சையமே காரணமாகும். பச்சையம் சூரிய ஒளி கிடைக்காது விடின் அழிந்து விடும் எனவே பலகையின் கீழ் உள்ள புற்களுக்கு சூரிய ஒளி கிடையாது போக பச்சையம் அழிய அவை வெளிறிக் காணப்படுகின்றன.

# கணக்கியல் A/L

## கம்பனிக்கணக்குகள்
## தொடர் 2

### பங்குகளுக்கான மேலதிகஒப்புதல்களும்குறைந்த ஒப்புதல்களும்
### Oversubscription and Undersubscription For Shares

கம்பனியொன்று தான் வழங்கத் தீர்மானித்த பங்குகளின் அளவுக்கே விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளுமாயின் பங்குகளை எவ்விதமான சிக்கலுமின்றி ஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால், வழங்கத் தீர்மானித்த பங்குகளின் எண்ணிக்கையினை விடக் குறைவானளவில் அல்லது மிகையானளவில் விண்ணப்பங்கள் (ஒப்புதல்கள்) கிடைக்குமாயின் ஒதுக்கீட்டில் சிக்கல் நிலையேற்படும். ஓர் கம்பனி வழங்கத் தீர்மானித்த பங்குகளின் அளவினைவிடக் குறைவான விண்ணப்பங்கள் கிடைக்குமாயின், கிடைத்த விண்ணப்பங்களின் அளவிற்கு மட்டுமே பங்குகளை ஒதுக்கீடு செய்ய முடியும். உதாரணமாக, ஓர் கம்பனி 10,000 பங்குகளை வழங்க முடிவு செய்ய, ஆனால் 7800 விண்ணப்பங்களே கிடைக்கப்பெறுமாயின் 7800 பங்குகளை மட்டுமே ஒதுக்கீடு செய்ய முடியும். எனினும், இவ்வாறான நிலைமைகளில்முற்பகர்வில் குறிப்பிடப்பட்டிருக்கும் ''ஆகக் குறைந்த ஒப்பப்பணம் அல்லது இழிவுக்கட்டண'' அளவுக்கு குறைவாகவே விண்ணப்பங்கள் கிடைக்குமாயின், கம்பனிகள் பங்குகளை ஒதுக்கீடு செய்ய முடியாது. ஆகையால், பெற்றுக்கொண்ட விண்ணப்பப் பணங்களை மீளச் செலுத்த வேண்டும். இதனை 1982-ம் ஆண்டு 17-ம் இல. இலங்கைக் கம்பனிகள் சட்டத்தின் 49 (1) பிரிவும் வலியுறுத்துகின்றது.(**If the applications are less than the minimum stated, then the application monies must be returnd to the senders**)

கம்பனிகள் வழங்கத் தீர்மானித்த பங்குகளின் அளவினைவிட மேலதிகமானவிண்ணப்பங்கள் (**Over-subscription**) கிடைக்குமாயின் பங்குகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக கம்பனிகளுக்குச் சிக்கல் ஏற்படும். எனவே, இத்தகைய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகக்கம்பனிகள்முன்னுரிமைஅடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையினை(**Preference allocation method**) அல்லது விகிதாசார ஒதுக்கீட்டு முறையினை (**Pro - rata allocation method**) பின்பற்றிக் கொள்கின்றன. இங்கு முன்னுரிமை ஒதுக்கீட்டு முறையென்பது, ஏதாவது ஓர் அடிப்படையினை (உதாரணமாக, முதலில் விண்ணப்பித்தவர்கட்கு முன்னுரிமை அல்லது கூடுதலான பங்குகளை விண்ணப்பித்தவர்கட்கு முன்னுரிமை) ஆதாரமாகக் கொண்டு ஒரு சாராருக்குப் பங்குகளை ஒதுக்கீடு செய்து ஏனையோரதுவிண்ணப்பங்களைநிராகரித்தலாகும். ஆனால் விகிதாசார ஒதுக்கீட்டு முறையென்பது, விண்ணப்பித்த அனைவருக்கும் பங்குகள் வழங்கப்படும் என்ற ரீதியில் கிடைத்த விண்ணப்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யக் கூடிய பங்குகளுக்கும் இடையிலான விகிதாசாரப்படி பங்குகளை ஒதுக்கீடு செய்வதாகும். இங்கு விண்ணப்பதாரர் அனைவரும் பங்குகளைப் பெறக் கூடியதாக இருப்பினும் விண்ணப்பித்த அளவினை விடக் குறைவான பங்குகளையே பெறக்கூடியதாக இருக்கும். உதாரணமாக, கம்பனி ஒன்று 70,000 விண்ணப்பங்களைப் பெற்றிருக்கும் நிலையில் 50,000 பங்குகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படக் கூடியவையாயின், இங்கு ஒவ்வொரு ஏழு விண்ணப்பங்களுக்கும் ஐந்து பங்குகள் என்ற அடிப்படையில் விண்ணப்பதாரர் அனைவருக்கும் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படும். முன்னுரிமை ஒதுக்கீட்டு முறையிலே ஒரு சாராரின் விண்ணப்பங்கள் முழுமையாக நிராகரிக்கப்படுவதால் அவர்களதுவிண்ணப்பப்பணங்களும் மீளச்செலுத்தப்படுகின்றன. ஆனால், விகிதாசார ஒதுக்கீட்டு முறையிலே விண்ணப்பதாரர் அனைவருக்கும் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படுவதால் விண்ணப்பதாரர் ஒதுக்கல்: அழைப்புகள் என்பவற்றில் பணம் செலுத்த வேண்டிய நிலைமைகள் காணப்படும்போது மேலதிக மனுப் பணம் (**Excess application monies**) திருப்பிக்கொடுக்கப்படுவதில்லை. மாறாக, மேலதிக மனுப் பணம் கம்பனியிலேயே வைத்திருக்கப்பட்டு ஏனைய சந்தர்ப்பங்களில் பெறப்பட வேண்டிய பணத் தொகைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

### பங்கு வழங்கல் தொடர்பான நாட்குறிப்புகள்

பங்குகள் வழங்கலுடன் தொடர்புடைய அடிப்படைப் பதிவுகளை முதலில் கருத்திற்கொள்வோம்.

1) மனுப் பணம் பெறப்படுதல்:-
வங்கிக் கணக்கு வரவு xx
மனு ஒதுக்கல் கணக்கு செலவு xx

2) ஒதுக்கிய பங்குகளுக்கானமனுஒதுக்கல்கள் மீதான முகவிலைப் பங்கினை பங்கு முதல் கணக்குக்கு மாற்றுதல்:-
மனு ஒதுக்கல் கணக்கு வரவு xx
பங்கு முதல் கணக்கு செலவு xx

3) நிராகரிக்கப்பட்ட மனுப்பணங்களை மீளச் செலுத்துதல்:-
மனுஒதுக்கல் கணக்கு வரவு xx
வங்கிக் கணக்கு செலவு xx

4) ஒதுக்கல் மீதான பணத் தொகை பெறப்படுதல்:
வங்கிக் கணக்கு வரவு xx
மனு ஒதுக்கல் கணக்கு செலவு xx

5) முதலாம் அழைப்பு விடுக்கப்படுதல்:-
முதலாம் அழைப்புக் கணக்கு வரவு xx
பங்கு முதல் கணக்கு செலவுXX

6) முதலாம் அழைப்புப் பணம் பெறப்படுதல்:-
வங்கிக் கணக்கு வரவு xx
முதலாம் அழைப்புக் கணக்கு செலவு xx

7) இரண்டாம் அழைப்பு விடுக்கப்படுதல்;-
இரண்டாம் அழைப்புக் கணக்கு வரவுXX
பங்கு முதல் கணக்கு செலவுXX

8) இரண்டாம் அழைப்புப் பணம் பெறப்படுதல்:-
வங்கிக் கணக்கு வரவுXX
இரண்டாம் அழைப்புக் கணக்கு செலவுXX

**S. K. பிரபாகரன்** B. B. A (spl)
(உடுவில் மகளிர் கல்லூரி)

உதாரணம்: I

வரையறுத்த கணேசன் கம்பனியானது ஒவ்வொன்றும் 100 ரூபா பெறுமதியான 2000 சாதாரண பங்குகளை அங்கீகரித்த மூலதனமாகக் கொண்ட கம்பனியாகும். இவற்றில் 1000 சாதாரண பங்குகளை முகவிலையில் வழங்க முடிவு செய்து முன்விவரணம் வெளியிட்டது. அதன்படி மனுவில் 30 ரூபாவும், ஒதுக்கலில் 50 ரூபாவும், முதலாம் அழைப்பில் 15 ரூபாவும், இறுதி அழைப்பில் 5 ரூபாவும் அறவிட தீர்மானித்தது. கம்பனிக்கு 1200 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவற்றில் 200 விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு. ஏனையோருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டன. பங்குகள் தொடர்பான பணங்கள் யாவும் உரிய தவணைகளில் உரியவாறு பெற்றுக்கொள்ளப்பட்டன.

தயாரிக்குக:- அ) பேரேட்டுக் கணக்குகள்
ஆ) கம்பனியின் ஆரம்ப ஐந்தொகை

**வங்கி**

| | | | |
|---|---|---|---|
| ம. ஒது 1) | 36,000 | ம. ஒது 3) | 6,000 |
| ம. ஒது 4) | 50,000 | மீ/செ | 100,000 |
| 1-ம் அழை 6) | 15,000 | | |
| 2-ம் அழை 8) | 5.000 | | |
| | 106,000 | | 106,000 |
| மீ / வ | 100,000 | | |

**மனு ஒதுக்கல்**

| | | | |
|---|---|---|---|
| சா. ப 2) | 80,000 | வங்கி 1) | 36,000 |
| வங்கி 3) | 6,000 | வங்கி 4) | 50,000 |
| | 86,000 | | 86,000 |

**1-ம் அழைப்பு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப 5) | 15,000 | வங்கி 6) | 15,000 |
| | 15,000 | | 15,000 |

**இறுதி அழைப்பு**

| | | | |
|---|---|---|---|
| சா. ப 7) | 5,000 | வங்கி 8) | 5,000 |
| | 5,000 | | 5,000 |

**சாதாரண பங்கு முதல்**

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 100,000 | ம. ஒது 2) | 80,000 |
| | | 1-ம் அழை 5) | 15,000 |
| | | 2-ம் அழை 7) | 5,000 |
| | 100,000 | | 100,000 |
| | | மீ/வ | 100,000 |

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பொருளியல்

## கடந்த 14-ம் திகதிய தொடர்ச்சி

### 10. ★ i. வளமாக்கி உதவு தொகை

வளமாக்கியின் (உரத்தின்) சந்தை விலையைக் குறைப்பதற்காக அரசினால் வழங்கப்படும் உதவு தொகையே வளமாக்கி உதவு தொகையாகும். விவசாயிகளது உற்பத்திச் செலவைக் குறைத்து இலாபத்தை அதிகரிப்பதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்கலாம் என்ற அடிப்படையில் இவ் உதவு தொகை வழங்கப்படுகிறது. 1962 இலிருந்து உரமானியம் வழங்கப்படுகிறது. 1983 இலிருந்து தேசிய உரச் செயலகமே இதனை நிர்வகித்து வழங்கி வருகிறது. இதற்கான செலவுகள் வரவு செலவுத் திட்ட நடைமுறை மாற்றங்களில் இடம்பெறுகின்றன.

(3 புள்ளிகள்)

31 12.1989 இல் இவ் உதவு தொகை வழங்குவது நிறுத்தப்பட்டது. புதிய அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து 1994 செப்டம்பர் முதல் வளமாக்கி உதவு தொகை வழங்கப்பகிறது.

(2 புள்ளிகள்)

### ★ ii ரூபாப்பிணைகள் (Rupee LoanSecurities)

''அரசாங்கம் வரவு செலவுத் திட்டப்பற்றாக் குறைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிதி பெறுவதற்கென ஒதுக்கீட்டுச் சட்டம் (Appropriation Act) 21 b பிரிவின்கீழ் மத்தியவங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தால் வெளியிடப்படும் நடுத்தர, நீண்டகாலக் கடன் பத்திரங்களே ரூபாப்பிணைகளாகும்,''

(2 புள்ளிகள்)

- சந்தை நிலைமைக்கேற்ப முதிர்ச்சி காலமும் வட்டி வீதமும் வேறுபடும் வட்டி அரையாண்டுக்கொரு முறை வழங்கப்படுகிறது.
- இக்கடன்கள் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்படுவதால் பாதுகாப்பான முதலீடாகும்,
- சந்தைக்கடன் கருவிகளில் இது முதன்மையானது.
- தற்போது வங்கித்துறை 25% தையும், வங்கியல்லா துறை 75% தையும் உடமையாகக் கொண்டுள்ளன. ஊழியர் சேம நிதியம், தேசிய சேமிப்பு வங்கி, காப்புறுதி நிறுவனங்கள் என்பன வங்கியல்லா மூலங்களில் முக்கியமானவையாகும்.
- வங்கித்துறை கொள்வனவு செய்யின் பணவீக்க விளைவுகள் தோன்றும். வங்கியல்லாத்துறை கொள்வனவு செய்யின் பணவீக்க விளைவுகள் தோன்றாது.

(3 புள்ளிகள்)

### ★ (III) வெளிநாட்டு இணைக்கிணை நிதியம்

''அரசிற்கு வெளிநாடுகளிலிருந்து பொருள் வடிவில் கிடைக்கும் நன்கொடைகள கடன்களை உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு வழங்கி, அவர்களிடமிருந்து அதற்கு சமமான பெறுமதியை இலங்கை ரூபா வடிவில் பெற்று, மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்படும் நிதியே வெளிநாட்டு இணைக்கிணை நிதியாகும் ''

(3 புள்ளிகள்)

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான பண நிலுவைகளின் பயன்பாட்டில் இது முக்கியமானதாகும். இதனை நிதியீட்டப் பயன்படுத்தின் பணநிரம்பல் கூடி பணவீக்க விளைவுகள் (விரிவுத்தாக்கம்) தோன்றும். (2 புள்ளிகள்)

### ★ (iv) இலங்கையில் பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பு

இலங்கையில் பாதுகாப்புச் செலவில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்பைப் பின்வரும் தரவுகள் காட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| 1977 | - 500 | மில். ரூபா |
| 1987 | - 10000 | ,, ,, |
| 1990 | - 15000 | ,, ,, |
| 1994 | - 22832 | ,, ,, |

இது இவ்வாண்டு அரசின் மொத்தச் செலவில் 15% ஆகவும், வரவுசெலவுத்திட்ட மொத்தப்பற்றாக் குறையில் [70240 மில். ரூபா] ஏறத்தாழ $\frac{1}{3}$ பங்காகவும் விளங்குகிறது.

- 1977 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் பாதுகாப்புச்செலவு 45 மடங்கு அதிகரித்துள்ளது.
- 1983 இற்கு முன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்ட பாதுகாப்புச் செலவு 1993 இல் 4 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. [2 புள்ளிகள்)

## வே. கருணாகரன்
B. A Hons, Dip. in Ed.

இதன் பொருளாதர விளைவுகள் :-

- பாதுகாப்புச் செலவின் அமையச் செலவுகள் - பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்பு பாதுகாப்புச் செலவுக்காகப் பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், தொலைத்தொடர்புகள், வலுவளங்கள், வேளாண்மை, நீர்ப்பாசனம். போக்குவரத்து பெருந்தெருக்கள் போன்ற சமூகபொருளாதார முதலீட்டில் ஒரு பகுதி வெட்டப்படுவதால் அவை பாதிக்கக்கப்படுகின்றன.
- மனிதவள (உயிர்) இழப்பு
- பௌதீக முதல் சொத்து அழிப்பு
- விவசாயம், கைத்தொழில், மீன்பிடி பாதிப்பு
- வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை - உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்சுமை அதிக்ரிப்பு
- வரிச்சுமை (பாதுகாப்புவரி) அதிகரிப்பு - பணவீக்கம்
- மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிப்பு

(2 புள்ளிகள்)

பாதுகாப்புச்செலவைக் குறைப்பதற்கான முக்கிய வழி இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவில் காண்பதாகும்.

(1 புள்ளி)

### ★ (V) தேசிய அபிவிருத்திச்சபை (National Development Council -NDC)

''இலங்கை அரசின் பொருளாதார அபிவிருத்திக் கொள்கையையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரிப்பதற்கென புதிய அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள அமைப்பே தேசிய அபிவிருத்திச்சபையாகும். இச்சபையானது நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளை ஒருங்கிணைக்கும்.

(2 புள்ளிகள்)

தே. அ. சபையானது பின்வரும் துறைசார்ந்த துணைச்சபைகள் (Sectoral Councils) எட்டினைக் கொண்டிருக்கும்.

1. உள்நாட்டு விவசாயம் (Domestic Agriculture)
2. ஏற்றுமதி விவசாயம் (Export ,, )
3. கடற்தொழில் (Fishing)
4. கைத்தொழில் அபிவிருத்தி (Industrial Devel - opment)
5. சேவைகள் (Services):
   சுற்றுலாத்துறை, வங்கித்தொழில், காப்புறுதி போன்றன இதனுள் அடங்கும்.
6. பொருளாதார கீழ்கட்டமைப்புக்கள் (Economic Infrastructure):
   வீதி அபிவிருத்தி, ரயில்போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, ஏனைய வசதிகள் இதனுள் அடங்கும்.
7. சமூகக்கீழ்க்கட்டமைப்புக்கள் (Social Infrastr ucture):
   கல்வி, சுகாதாரம், தொழிற்திறன் பயிற்சி போன்றன இதனுள் அடங்கும்.
8. **வறுமை ஒழிப்பு (Poverty Alleviation):**
   தேசிய சுபீட்ச இயக்கமும் சமுர்த்தி-Prosperity Movement), அதனோடு தொடர்புடைய ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களும் இதனுள் அடங்கும்.
   ஜனசக்தி (Janasaviya) நிகழ்ச்சித் திட்டமும் தேசிய சுபீட்ச இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

இந்தத் துணைச் சபைகள் வழங்கும் சிபார்சுகளை தே.அ.சபை ஆராய்ந்து அமுல் படுத்தும்

(2 புள்ளிகள்)

தே. அ. சபை திட்டமிடல் அமைச்சினால் (Ministry of Planning) செயற்படுத்தப்படும். நிதியமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி இதன் தலைவராக இருப்பார். அரசாங்க, தனியார்துறை அதிகாரிகளும், தொழிற்சங்கங்களும் மற்றும் அவைபோன்ற இயக்கங்களின் பிரதிநிதிகளும் இச்சபையில் இடம் பெறுவர் (1 புள்ளி)

### ★ (vi) உலகவர்த்தக நிறுவனம் (World Trade Organization-WTO)

''வர்த்தகத்திற்கும் தீர்வைக்குமான பொது ஒப்பந்தம் (GATT) இற்குப் பதிலாக 1995 ஜனவரி 1 முதல் செயற்படவுள்ள அமைப்பு உலகவர்த்தக நிறுவனமாகும்.'' இது சம்பந்தமாக GATT அமைப்பின் எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1994 ஏப்ரலில் மெரோக்கோவிலுள்ள மராக்காஷ் என்னுமிடத்தில் நடைபெற்றது. (2 புள்ளிகள்)

- வர்த்தகரீதியிலான தீர்வைகளைக் குறைக்கவும், தடைகளை அகற்றவும் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் உலகரீதியிலான வர்த்தகத்தைப் பெருக்குவதனை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இது பின்வரும் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தும்.

  - சர்வதேச நாணயநிதி, உலகவங்கி என்பவற்றுடன் இணைந்த வகையில் பாரிய பொருளாதாரத்தைப் பேணுதல்
  - வறிய நாடுகளின் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்
  - சர்வதேச வர்த்தகக் கொள்கையைக் கண்காணித்தல், கட்டுப்படுத்தல் இந்த வகையில் வளர்முக நாடுகளுக்கு ஆலோசனை வழங்கல்
  - விவசாயம், கைத்தொழில் துறைகளிடையே இணைப்பை ஏற்படுத்தல், அயனவலய மூலப்பொருட்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தல்
  - நிதிச்சேவை, ஊழிய நகர்வு, போக்குவரத்து, கட்புலச் செவிப்புலக் காட்சிச் சேவைகளைத் தாராளமாக்குதல்.
  - சர்வதேச சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள நுண்மதிச் சொத்து உரிமைகள் (Interlectual Property Right) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தல்

(3 புள்ளிகள்)

# கணக்கியல்

## வரை. கணேசன் கம்பனியின் ஆரம்ப ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| அனுமதித்த மூலதனம்; @ 100/= ஆன 2000 சா.ப | 200,000 | | |
| வழங்கிஇறுத்த மூலதனம்: @ 100/= ஆன 1000 ச.ாப | 100,000 | வங்கி | 100,000 |
| | 100,000 | | 100,000 |

★ மாணவர்களின் மேலதிக விளக்கங்களுக்காக பேரேட்டுக் கணக்குகளில் பதிவுகளின் ஒழுங்குக்கேற்ப இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பயிற்சிக் கணக்குகள்:-

1) வரையறுத்த சந்தோஷ் கம்பனி ஒவ்வொன்றும் 25 ரூபாவான 20000 சாதாரண பங்குகளை உடையது. இவற்றில் 5000 சாதாரண பங்குகளை சமவிலையில் வழங்கிப் பணத்தை அறவிட கம்பனி விளம்பரம் செய்தது. மனுவில் 10 ரூபாவும் ஒதுக்கலில் 7 ரூபாவும்: 1-ம் அழைப்பில் 5 ரூபாவும்: 2-ம் அழைப்பில் 3 ரூபாவும் கம்பனி அறவிடும். மொத்தமாக 4500 விண்ணப்பங்களே கம்பனிக்குக் கிடைக்கப் பெற்றன. கம்பனி பங்குகளை ஒதுக்கீடு செய்து பணத் தொகைகளை உரியவாறு பெற்றுக் கொண்டது.

தயாரிக்குக:- அ) பேரேட்டுக் கணக்குகள்
ஆ) தொடக்க ஐந்தொகை

2) சியோன் கம்பனி லிமிட் ஒவ்வொன்றும் 10 ரூபாவான 75000 சாதாரண பங்குகளைப் பதிவு செய்துள்ளது. கம்பனி தனது ஆரம்பத் தொழிற்பாட்டு மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 50000 சாதாரண பங்குகளை பெயரளவுப் பெறுமதியில் வழங்கிப் பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கி முன் விவரணம் வெளியீடு செய்தது.

அ) ஆகக் குறைந்தது 25 பங்குகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ) விண்ணப்ப முடிவு திகதி 01-01-1995

இ) பணம் வருமாறு பெறப்படும்;- மனு- 3/-
ஒதுக்கல்- 5/-
1-ம் அழைப்பு- 1/50
2-ம் அழைப்பு- -/50

கம்பனிக்கு 58500 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியற்ற 8500 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு ஏனையோருக்குப் பங்குகள் ஒதுக்கப்பட்டன. கட்டணங்களை அறவிட்டபோது 1-ம் அழைப்பில் 1500 பங்குகளுக்கும்; இறுதி அழைப்பில் மொத்தமாக 2000 பங்குகளுக்கும் பணம் பெறப்படாமை தவிர ஏனைய பங்குகளுக்கான பணங்கள் பெறப்பட்டன.

தயாரிக்குக:- அ) பேரேட்டுக் கணக்குகளும்; நாட் குறிப்பேடுகளும்
ஆ) தொடக்க ஐந்தொகை

★ விடைகள் அடுத்த தொடரில்.

# இலவச ஆங்கில வகுப்பு

(தொல்புரம)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலை கிழக்கு அலகினால் 1995 க பொ த சாதாரண மாணவர்சளுக்கான இலவச ஆங்கில பாட வகுபபுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி இலவச வகுப்புகளில் கற்கவிரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை ஜனவரி 6ஆம் திகதிக்குமுன் மீசாலை மில் வீதியிலுள்ள பணிமனையில் சமர்பிக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது (41)


## வாணி கல்வி நிறுவனம்

### சங்கானை

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் முதல் O/L வரை

| | |
|---|---|
| கணிதம் | விஞ்ஞானம் |
| திரு. கணேந்திரன் | திரு. அருள்நேசன் |
| தமிழ் | சமூகக்கல்வி |
| திரு. சின்னத்தம்பி | திரு. ஜெயக்குமார் |
| ஆங்கில | வர்த்தகம் |
| திரு. மண்டலேஸ்வரன் | திரு. சசி |

சமயம்
திரு வாமதேவன்

★ விசேட கவனிப்புடன்
5-ம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்புக்கள்
கணிதம் - கணேந்தி
தமிழ் - வாமன்

SPOKEN ENGLISH
With
GRAMMAR

★ சகல வகுப்புகளுக்கும் மாதாந்தப் பரீட்சை நடாத்தப்பட்டு சிறந்த பெறுபேறு பெறும் மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

★ ஆண்டிறுதியில் சிறந்த மாணவருக்கு பதக்கம் வழங்கப்படும்.

ஆரம்பம்: 02-01-95 மாலை 4·00மணி

(சி-11020)


## அவுஸ்திரேலியா உதவி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுகாதார சேவைகளை மேம்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் ஒரு தொகுதி சுகாதார உபகரணங்களை வழங்கியுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தினூடாக அனுப்பப்பட்டுள்ள இப்பொருட்கள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன

## புதிய கல்வியாண்டு

(நவாலி)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான அடுத்த கல்வியாண்டு எதிர்வரும் 16-ம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (05)

## 30க்கு முன் சமர்ப்பிக்குக

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் நிரந்தரமாக வாழும் மக்களும் மேற்படி பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி வாழும் மக்களும் தத்தமது கிராமசேவை அலுவலர்களிடம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட குடும்ப விபரத் திரட்டுப் படிவத்தை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பதாகஒப்படைக்குமாறும் படிவத்தை இதுவரை பெறாதவர்களும் பெற்று. அதனை பூரணப்படுத்தி மேற்குறித்த திகதிக்கு முன்னர் உரிய கிராம அலுவலர்களிடம் ஒப்படைத்து ஒத்துழைப்பு நல்குமாறும் வலிதென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். [41]

## ஆங்கில வகுப்பு

சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் முறைசாரா கல்விப்பிரிவு 1995 ஆண்டிற்கான வார இறுதி ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. ஆறுமாத காலம் சனிஞாயிறு தினங்களில் பிற்பகல் வேளைகளில் நடைபெறவுள்ள மேற்படி ஆங்கில வகுப்புகளில் பயில ஆர்வமுள்ளோர் வித்தியாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
02-06-1970

தமிழீழ மண்ணில்
28-12-1989

### வீரவேங்கை இவான்
### (லோகேஸ்வரன் மனோகரன்)


வெந்தணல் வீழ்ந்திடும் வேதனை சூழ்ந்திடும்
பைந்தமிழ் நாட்டிலே பாவிகள் படைவரும்
கண்டிடும் காட்சியால் கருத்தினில் கனல் எழும்
வென்றிடும் உரிமைக்காய் வேங்கையாய் இவ(ா)ன்
- உயிர் விழும்

கண்ணோரம் நீராடும் நெஞ்சோரம் நினைவாடும்
கனிவான இவ(ா)ன் உறவுகள் களத்தினில்போராடும்
கண்ணாடிக் கருவிழிகள் கல்லறையில் காத்திருக்கும்
விண்ணோடி தமிழ் மண்ணின் விடியலின் சேதி
சொல்லும்.

சித்தன்கேணி — உன் நினைவில் வாழும்

(10420) — குடும்பத்தினர், நண்பர்கள்.

## 31-ம்நாள்கண்ணீர்அஞ்சலி



### தியாகராசா சிவகுமார்

பிறப்பு 26-03-1967 — இறப்பு 28-11-1994

அல்வாயில் தோன்றி அரியபல தொண்டாற்றி
எல்லோரையும் கவர்ந்த சிவகுமாரா!-பல்லோரும்
கண்ணீர் வடிக்க கவினழகா எங்கு சென்றாய்
எண்ணமெலாம் நீயிருப்பாய் நீடு.

-மாலிசந்தி நண்பர்கள்

மாலிசந்தி,
அல்வாய் தெற்கு,
அல்வாய் [10487[

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

**சிந்தனைக்கு..**

அதிகாரத்தில் உள்ள நண்பர்
நாம் இழந்து விட்ட நண்பர்
- ஹென்றி ஆடம்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-12-94
-தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்-05

## நண்பர் ஒருவர் அதிருப்தியாளராகிறார்

"நாடு இன்று காடாகி விட்டது. நாடு அபிவிருத்திப் பாதையில் செல்லும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு இன்று பொய்யாகி வருகின்றது.' சந்திரிகா அரசாங்கம் குறித்து ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் செய்துள்ள இவ் விமர்சனமானது, சந்திரிகா குமாரதுங்காவின் தலைமையின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை சிதைவடைந்ததன் எதிரொலி என்றே கொள்ள வேண்டும்.

விக்டர் ஐவன் சந்திரிகா குமாரதுங்காவிற்கு மிகவும் நெருக்கமானவர். அவரின் நெருங்கிய ஆலோசகர்களில் ஒருவர் எனவும் கூறப்படுபவர். அந்நேரம் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருவதற்கு ராவய பத்திரிகையின் பங்களிப்பும் மிகவும் முக்கியமானதாகும்.

இந்த நிலையில் விக்டர் ஐவன் சந்திரிகா அரசாங்கத்தின் போக்குக் குறித்து செய்துள்ள இவ் விமர்சனமானது அவரது எதிர்பார்க்கையில் இருந்து சந்திரிகா அரசாங்கம் விலகிச் செல்கின்றது என்றே கருத இடமுண்டு. விக்டர் ஐவன் பொதுவாகவே இவ்வாறான விமர்சனங்களைச் செய்யக் கூடியவராக இருப்பினும் 'மக்களின் எதிர்பார்ப்பு இன்று பொய்யாகிப் போய்விட்டது' என்பது மிகவும் கடுமையானதொரு விமர்சனமே. இது சந்திரிகா அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது, என்பதன் அர்த்தமே ஆகும்.

சந்திரிகா அரசாங்கம் மீது அவர் இவ்வாறான கடும் விமர்சனத்தை வெளியிட்டமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதற்கு சந்திரிகா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் புதிதாக எதையும் சாதிக்க விரும்பாததையும் முன்னைய அரசின் பாதையிலேயே தொடர முற்படுவது போன்ற நிலை தென்படுவதும் காரணமாக இருக்கலாம்.

இந்தவகையில் விக்டர் ஐவனுக்கு அதிருப்தி ஏற்படுத்திய விடயங்களில் முக்கியமானதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு பிரதமர் பதவி வழங்கியமை இருக்கக் கூடும். இது சந்திரிகா குடும்ப ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த எடுத்த முயற்சியாகவே கருத இடமுண்டு.

# போரிடும் ஆற்றலை அதிகரிக்க ராணுவத்திற்கு போர் ஓய்வு தேவை

சிறிலங்கா இராணுவத்தின் அனைத்துக் காலாட் படை அணிகளும் (Infantry regiments) 10-வது நிரந்தர படைப் பிரிவுகளையும் (10th regular battalions) 11வது தொண்டர்படைப்பிரிவுகளையும் (11th Volunteer batta -lions) உருவாக்குவதற்கான ஆட்சேர்ப்பினை அண்மையில் பூர்த்தியாக்கியுள்ளன. 'சிங்ஹ', 'கெமுனு', 'கஜபா', 'விஜயபா' ஆகியனவே இக் காலாட்படை அணிகளாகும். சிறிலங்கா இராணுவத்தின் காலாட்படை பற்றாலியன் ஒன்றில் படைவீரரும் அதிகாரிகளுமாக மொத்தம் 800 பேர் இருப்பர். இவ்வாறாக 8 படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு தற்போது புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது.

தொண்டர் படைப் பிரிவுகளுக்கான அதிகாரிகள் தேர்விற்கு கணிசமான தொகையினர் சமூகமளித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொண்டர் படைப் பிரிவுகளில் சேர்வது பாதுகாப்பானது என்னும் உணர்வு பரவலாக உள்ளமையாலும் இப் பிரிவுகளில் சேர்வோருக்கு ஏனையோரைப் போல் 12 வருட கட்டாய சேவை இல்லாமையாலும், நிரந்தரப் படைப் பிரிவுகளில் சேர்வதை விட தொண்டர் படைப்பிரிவுகளில் பல சிங்கள இளைஞர் சேர விரும்புகின்றனர். தற்போது நிரந்தரப்படைப்பிரிவுகளுக்குச் சேர்க்கப்படும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விருப்பம்போது மட்டுமே சேவையிலிருந்தும் விலகலாம் எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் வட கிழக்கிற்கு தொண்டர் படைப் பிரிவுகள் அனுப்பப்படும்போதும் ஏற்கனவே பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு புலிகள் இல்லாப் பகுதிகளாகக் கருதப்படும் இடங்களிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். [உதாரணம் திருமலை நகரம், கந்தளாய், புனானை, வெலிக்கந்தை இன்னோரன்ன] எனினும் முன்னிலைப் பாதுகாவல் அரண்களில் (F.D.L.S.) வெறுமனே கண்காணிப்பில் இலகுவாக ஈடுபட்டிருக்கலாம் எனக் கருதி தொண்டர் படையணிகளில் பலர் இணை

மையாக அடிவாங்கிய பிரிவுகள் தொண்டர் பிரிவுகளே. [உதாரணம் கட்டுப்பொத்த, ஜானகபுர]

இம்முறையும் அதிகாரிகள் பயிற்சிக்கு க.பொ.த. சாதாரண பரீட்சையில் 6பாடங்கள் சித்தியடைந்தவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தொண்டர் படைப்பிரிவு அதிகாரிகளுக்கும் நிரந்தர படைப்பிரிவு அதிகாரிகளுக்கும் இதுவே அடிப்படைக் கல்வித் தகைமையாகும். நிரந்தர படைப் பிரிவு அதிகாரிகளுக்கு 24 மாதமுழு நேரப் பயிற்சியும். தொ. படை அதிகாரிகளுக்கு 12 மாதப் பயிற்சியும் நடைபெறும். பயிற்சிக் காலத்தில் உணவு, உறைவிட வசதிகளுடன் ஐயாயிரம் ரூபாய் வரையிலான சம்பளமும் இவர்களுக்கு வழங்கப்படும். பயிற்சி முடிந்து வட கிழக்குச் செல்லும்போது இவர்களின் ஆரம்பச் சம்பளம் 7200 ரூபாவாகும் வேறு சலுகைகள் தனி க.பொ.த. சாதாரண பரீட்சையில் 6 பாடங்களுடன் இங்ஙனம் ஆரம்பச் சம்பளமும் சலுகைகளும் வேறு எங்கும் இன்றைய காலத்தில் கிடைக்காது என்பதாலேயே படை அதிகாரிகள் தேர்விற்கு கணிசமான இளைஞர் தோற்றியுள்ளனர் எனச் சில பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கையினால் ஏலவே உள்ள படைப்பிரிவுகளின் ஆட்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய படைப் பிரிவுகள் முழுமையாக புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களாலேயே உருவாக்கப்படுவதில்லை. ஏலவே உள்ள படைப்பிரிவுகளில் இருக்கும் உயர் அதிகாரிகள், இடைநிலை அதிகாரிகள் மற்றும் அனுபவமிக்க காலாட்படையினர் ஆகியோரை எடுத்து, புதிதாகச் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களையும் இணைத்தே புதிய படைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவது இரா

காப்பு முன் அரண் நிலைகள் தற்சமயம் 12 படைப்பிரிவுகளைக் கொண்டு பேண வேண்டி உள்ளது. மேற்கூறிய புதிய படைப் பிரிவுகளை அமைக்க என ஆட்கள் எடுக்கப்படுவதாலும்பலர் படையை விட்டு ஓடுவதாலும் (Desertion) மொத்தம் 800 வீரர்களைக் கொண்டிருக்க வேண்டிய நிரந்தர காலாட் படைப் பிரிவுகள் Regular infantry battalions) தற்சமயம் சராசரியாக 600 வீரர்களுடனேயே சமாளிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே ஒரு குறிப்பிட்ட முன் அரண் நிலையைப் பாதுகாக்க தற்சமயம் முன்னரை விட 4 அல்லது 5 பிரிவுகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

> கடந்த வருடம் மட்டும் படைப்பிரிவுகளுக்குப் பொறுப்பதிகாரிகளாக இருக்கவேண்டிய லெப்ரினன்ட் கேணல் தரத்திலுள்ள 17பேர் படையைவிட்டு ஓடியுள்ளனர் அதிகாரிகள்மட்டத்திலான இந்த ஓட்டத்திற்குப்பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில்ஒன்று சுவாரசியமானது.

இவ்வாறு புதிய படைப் பிரிவுகள் உண்டாக்கப் படுவதன் காரணமாக காலாட்படைகளின் சண்டையிடும் திறன் பரவலாக வீழ்ச்சியடைய வாய்ப்பேற்படுகிறது. குறைந்த தொகையினரான சண்டை அனுபவமும் தேர்ச்சியும் உடைய அதிகாரிகள் கூடிய தொகையினராக உள்ள, அனுபவமோ தேர்ச்சியோ அற்ற காலாட்படை வீரர்களை வழி நடாத்த வேண்டிய சூழலை இப்படை விரிவாக்க நடவடிக்கை ஏற்படுத்துவதே இதன் பிரதான காரணமாகும். இத்துடன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள இளம் அதிகாரிகள் பயிற்சி முடிந்து வர இரண்டு வருடங்களாகும். அதுவரை குறுகிய காலத்துள் தம் பயிற்சியை முடித்து வரும் காலாட்படை வீரர்களை ஏலவே உள்ள அதிகாரிகளே தம் ஆணை வழிச் செலுத்த வேண்டும். ஆனால் தற்சமயம் சிறிலங்கா இராணுவத்தில் காலாட்படை அதிகாரிகள் தேவையான அளவிற்கில்லை. இதன் காரணம்.

1. நிரந்தரக் காயம் படல்.
2. சண்டையில் இறத்தல்.
3. சண்டையனுபவம் இருந்

படைப்பிரிவுகளுக்குப்பொறுப்பதிகாரிகளாக இருக்க வேண்டிய லெப்ரினன்ட் கேணல் தரத்திலுள்ள 17பேர் படையை விட்டோடியுள்ளனர். அதிகாரிகள்மட்டத்திலான இந்த ஓட்டத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று சுவாரசியமானது.

முன்னைய அரசாங்கம் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பல அதிகாரிகளை மீண்டும் சில துறைகளிற் சேவைக்கமர்த்த முடிவு செய்ததன் காரணமாக கிட்டத்தட்ட 60 பழைய அதிகாரிகள் உள்வாங்கப் பட்டனர். அவர்களுக்கு ஓய்வூதியத்துடன் சம்பளமும் வழங்கப்பட்டது. (இதை P. P. Scales என்பர் Pay and Pension) இவர்கள் அனைவரும் கொழும்பு, அனுராதபுரம் போன்ற இடங்களில் பெரும்பாலும் இராணுவ நிர்வாக வேலைகளில் அமர்த்தப்பட்டனர். இவர்கள் படைத்துறையில் பழைய கைகளாதலால் பல பல சலுகைகளை சுலபமாகத் தமதாக்கிக் கொண்டனர். இதனால் போர்க்களத்தில் பணி புரியும் அதிகாரிகள் கொழும்பு வரும்வேளைகளில் அவர்களுக்குப் பல வசதிகள்-குறிப்பாக வாகனங்கள்- கிடைக்காமற் போயின. இவ்வாறு அடிக்கடி நடைபெற்று வந்தமையால் களத்தில் நின்று போரிட்டு வந்த பல படைப்பிரிவு அதிகாரிகளுக்கு வெறுத்துப்போய் விட்டது. சண்டையில் ஈடுபட்டிருக்கும்தம்மைவிட ஓய்வூதியமும் சம்பளமும் மற்றும் இதர வசதிகள் பெற்றும் சில ஊழல்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்துக் கொண்டும் கொழும்பில் குஷியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பவர்கள் முக்கியமாகி விட்டார்கள் என்ற கசப்புணர்வு வடகிழக்கில் பணியாற்றும் பல படைப் பிரிவு அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்டதும் ஓட்டத்திற்கு ஒரு காரணம் எனப்படுகிறது.

புதிய படைப்பிரிவுகள் உருவாக்கப்படுவதால் காலாட்படை அணிகளின் போரிடும் திறனில் ஏற்படும் வீழ்ச்சி தற்காலிகமானதே எனவும் இரண்டு மூன்று வருடங்களில் இத்திறன் முன்பிருந்ததை விட ஓரிரு மடங்காவது அதிகரித்துவிடும்எனவும் சிறிலங்கா

ளுமே காலாட்படைக்குத்தற்போது அத்தியாவசியமாகத் தேவை என நம்புபவர் இன்றைய இராணுவத் தளபதி ஜெரிசில்வா. புதியபடைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவதால் ஈழப்போரில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தபல படைப்பிரிவுகளில் உள்ள பெரும்பாலார் ஓய்வு எடுக்கவும், மாற்றமாகவும்[rest and rotation] விசேட பயிற்சிகள் பெற அனுப்பப்படவும் நல்ல வாய்ப்பு ஏற்படுவதால் அவர்களின் போரிடு திறன் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் அதேவேளை, புதிதாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள்வீரர்கள் ஆகியோரும்தமக்குரியபயிற்சியும் போரனுபவமும் பெற்றிடுவதால் ஓரிருவருடங்களில் காலாட்படைகளின் போர்த்திறன் ஒட்டுமொத்தமாகப் பன்மடங்கு அதிகரித்திடும்என்பது ஜெரியும் அவரைச்சார்ந்தோரும்கொண்டுள்ளகருத்து. இரண்டாம் ஈழப்போர்ச்சண்டைகள்கடுமையாக நடைபெறாதிருக்கும் பட்சத்திலேயே இத்திட்டம் வெற்றியளிக்கும் என்பதுவெளிப்படை.

ஏனெனில் புலிகள் தொடர்ந்து தரைவழியிலான தாக்குதல்களை மேற்கொண்டால் ஆறுதலான பயிற்சிக்கும், களைத்தோரின் ஓய்விற்கும், விசேட வெளிநாட்டுப்பயிற்சிக்கும், அனுபவமிக்க காலாட்படை வீரர்களையும் அதிகாரிகளையும் பெரிய அளவில் போர்க்களப்பிராந்தியங்களில் இருந்து வெளியெடுக்க முடியாது. இவ்வகையில் பார்க்கும்போது குறைந்த பட்சம் ஒரு வருடமாவது புலிகளுடன் மோதல் இல்லாமல் இருப்பது இராணுவத்திற்குத்தன் போர்த்திறனை உயர்த்தவும் விருத்தி செய்யவும் இன்றியமையாமலிருப்பதையும் காணலாம். சந்திரிகாவின் முயற்சிக்கு இராணுவத்தலைமைப் பீடம் பெரிய முட்டுக்கட்டை போடாமலிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம். சந்திரிகாவும் அனுருத்தரத்வத்தையும் இராணுவத்தின் மேற்கண்ட நிலைமையைச் சரிவர உணர்ந்தே யுத்த நிறுத்த முயற்சிக்கு முன்னுரிமை அளிக்கின்றனர் என்பதும் புலப்படுகிறது.

நாயக்காவிற்கு பிரதமர் பதவி வழங்கியமை இருக்கக் கூடும். இது சந்திரிகா குடும்ப ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த எடுத்த முயற்சியாகவே கருத இடமுண்டு. அத்தோடு விக்டர் ஐவனுக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் இடையில் ஏற்கனவே சுமுகமான உறவு இல்லை. கடந்த காலத்தில் பகிரங்கமாகவே இருவரும் முரண்பட்டுக் கொண்டவர்கள். காரசாரமாகக் கண்டித்தும் கொண்டவர்கள்.

இது தனிப்பட்ட ரீதியிலான விவகாரமாக இருப்பினும், சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பத்தில் தெரிவித்தது போன்று இனப்பிரச்சினை விவகாரத்திலோ அன்றி ஏனைய விடயங்களிலோ முற்போக்கான ரீதியில் செயற்படவில்லை என்பது விக்டர் ஐவனுக்கு வெறுப்பேற்றியிருக்கலாம். அதிலும் இராணுவத்துடன் சமரசம் செய்து கொள்ள சந்திரிகா அரசாங்கம் முற்பட்டமை முக்கியமானதாக இருந்திருக்கும்.

ஏனெனில் கடந்த காலத்தில் இராணுவத் தலைமைப்பீடம், 'ராவய' பத்திரிகையின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தது. இராணுவத்தினர் புரிந்த படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பனவே 'ராவய' பத்திரிகையின் பெரும் பகுதியைக் கடந்தகாலத்தில் பிடித்துக் கொண்டிருந்தது. இதன் அடிப்படையிலேயே ஐ.தே.க. அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாடும், பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பான நிலைப்பாட்டையும் 'ராவய' எடுத்துச் சென்றது.

ஆனால் ஜனாதிபதிப்பதவி ஏற்றதும் சந்திரிகா அரசாங்கம், இராணுவத்துடன் செய்து கொண்ட சமரசமானது அவர்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்க வேண்டும். அத்தோடு இராணுவத்திற்கெனச் செய்யப்படும் உயர்ந்தளவு நிதி ஒதுக்கீடானது நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக உருவாகும் என்பதையும் உணர்ந்திருக்கலாம்.

அதாவது ஐ.தே.கட்சி செய்த உயர்ந்தளவு இராணுவச் செலவீடே இலங்கையின் அபிவிருத்திக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவும், ஊழல் மோசடிக்கு வழிவகுத்ததும் என்பது ஐவன் போன்றவர்களின் நிலைப்பாடாகும். இந்நிலையில் சந்திரிகா அரசாங்கமும் இவ்வாறே செயற்படுகின்றமை சிறிலங்கா இனி மீள்வதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதை அவர் புரிந்து கொண்டுள்ளார் போல் தெரிகிறது.

இதேசமயம் சந்திரிகா குமாரதுங்கா பதவி ஏற்று ஓர் குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வாறான விமர்சனத்தை முன் வைப்பது சரிதானா என்ற கேள்வி எழலாம். ஆனால் அடித்தளம் எவ்வாறு இடப்படுகின்றது என்பதைக் கொண்டு எவ்வாறு கட்டடம் அமையப் போகின்றது என்பதை எவரும் சுலபமாகவே தெரிவித்து விட முடியும். இந்தவகையில் சந்திரிகா அரசின்மீதான அதிருப்தியை அவர் எதிர்வு கூறியதில் தவறில்லை. ஏனெனில் அவர் உள்வீட்டு ரகசியங்கள் பலவற்றை அறிந்தவர்.

இலகுவாக ஈடுபட்டிருக்கலாம் எனக் கருதி தொண்டர் படையணிகளில் பலர் இணைந்து சேவையில் ஈடுபட்டிருப்பது உண்மையாயினும் இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்து சிங்கள தமிழ்எல்லைப் பகுதிகளில் கடு

பெற்றவர்களையும் இணைத்தே புதிய படைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவது இராணுவ நடைமுறை.

இதன் காரணமாக முன்னர் சராசரியாக 7 படைப்பிரிவுகளுடன் (Battlions) பேணப்பட்ட வடக்கின் சில பாது

1. நிரந்தரக் காயம் படல்.
2. சண்டையில் இறத்தல்.
3. சண்டையனுபவம் இருந்தும் ஆங்கில அறிவின் குறைபாட்டால் பரீட்சைகளில் தேறி நிரந்தரப் பதவி உயர்வடையாமல் இருத்தல்.

கடந்த வருடம் மட்டும் இத்திறன் முன்பிருந்ததை விட ஓரிரு மடங்காவது அதிகரித்துவிடும்எனவும் சிறிலங்கா இராணுவத்தின் உயர்பீடம் நம்புகிறது.

கூடியகாலப் பயிற்சியும், போரிடும் திறனை அதிகரிக்கும் தரமான பயிற்சி முறைக

முன்னுரிமை அளிக்கின்றனர் என்பதும் புலப்படுகிறது.

(கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றிலிருந்து)

# பாப்பரசரின் சர்வமத சந்திப்பில் பிக்குகள் கலந்து கொள்ளார்

## காலிமுகத்திடல் சிலுவைகள் குறித்தும் சர்ச்சை

பாப்பரசர் தனது கொழும்பு விஜயத்தின்போது சர்வமத தலைவர்களை சந்திக்கும் முக்கிய நிகழ்வில் பௌத்த மத தலைவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள்என கொழும்புப்பத்திரிகையொன்றுதெரிவித்துள்ளது.

இதேவேளை பௌத்த மத தலைவர்கள் பாப்பரசரின் சந்திப்பை புறக்கணிப்பது கத்தோலிக்க அரசியல் உலகில் பாதிப்பை உண்டாக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காலிமுகத்திடலில் நிரந்தர தேவாலயம் ஒன்றை அமைப்பதோ அல்லது பாரிய சிலுவையை அமைப்பதோ தமது நோக்கமல்ல என கொழும்பு ஆயர் அதி. வண. மல்கம் ரஞ்சித் பௌத்த மத பீடங்களுக்கு உறுதியளித்துள்ளார்.

தற்போது காலிமுகத்திடலில் வைக்கப்படும் சிலுவைகள் பாப்பரசரின் விஜயத்தையொட்டி தற்காலிகமாகவே அமைக்கப்படுவதாகவும் இவை பின்னர் அகற்றப்பட்டுவிடும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

# ஐ.தே. கவுடன் இணைய தொண்டா முயற்சியாம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமானும், ஏனைய ஒன்பது இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆஸ்பத்திரி வெற்றிடங்கள் ஜனவரியில் நிரப்பப்படும்

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அனைத்து ஆஸ்பத்திரிகளிலுள்ள வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகவெற்றிடங்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் குழு மீது துப்பாக்கிச் சூடு

## மூன்று பொலிசார் கைது

(கொழும்பு)

ஊழல் நடவடிக்கைபற்றிய விசாரணைகளை மேற்கொள்ளச்சென்ற பொலிஸ் குழுவொன்றின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்த மூன்று பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பதுளைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

# திறந்த பல்கலை. கற்கைநெறி

94/95 கல்வியாண்டில் சிறுகைத்தொழில் வாணிப முகாமைத்துவம், பட்ட மேற்கல்வி டிப்புளோமா, உயர்தொழில் ஆங்கிலம் கற்கைநெறிகளில் படிப்பை தொடர்வதற்காக திறந்த பல்கலைக் கழகத்தில் ஏற்கனவே பெயர் பதிந்தவர்களுக்கான பதிவுகள் இன்றும், நாளையும் காலை 8-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை மேற்கொள்ளப்படும் என பிராந்திய இயக்குனர் அறிவித்துள்ளார்.

# மதிப்பீட்டு கருத்தரங்கு

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரிய வாண்மை விருத்திக் குழுவினால் வெளியிடப்பட்டு வரும் விளக்கு சஞ்சிகையின், இதுவரை வெளிவந்துள்ள ஏழு இதழ்களையும் மதிப்பீடு செய்யும் நோக்கில் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் அறையில் இடம்பெறவுள்ளது.

# நான்கு அமைச்சுக்கள் அந்தஸ்தை இழக்கும்

எதிர்வரும் வாரங்களில் முன்னணி அமைச்சுக்கள் பலவற்றை அமைச்சரவையிலிருந்து விலக்குவதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம்தீர்மானித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''ஹிரு'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உணவு, நிர்மாணத்துறை, சுகாதாரம், கைத்தொழில் என்பனவே இவ்வாறு அமைச்சரவை அந்தஸ்தை இழக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12 28**

**புதன் இரவு**

08.01 -குயிலோசை-அருள் பிலிப்பையா எழுதிய ''எங்கள் மண் எங்களுக்காய் ஆகவேண்டும்'' கிராமிய நிகழ்வு
08.20 - ஏர்முனை -நிகழ்ச்சியில் ''மரம் நடுகை'' பற்றி கேள்வி பதில்
08.30 - செய்திகள்
08.40 - நாடகம் - சு. சிவராசாஎழுதிய''வளவனுக்கு நீதி சொன்ன வள்ளல்''
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994- 12- 29**

**வியாழன் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 விடுதலை கீதங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச்செய்திகள்
07.40 - விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

கரும்புலிகள் நினைவுநாள் போட்டி

# வெற்றிபெற்ற 53 கலைஞர்களுக்கு தமிழ்ச்செல்வன் பரிசு வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்தினரினால் கரும்புலிகள் நாளை ஒட்டி நடாத்தப்பட்ட அரங்க பாரம்பரிய போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

அரங்க பாரம்பரியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் 53 பேருக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் முன்னதாக மங்கள விளக்கை முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் தாயார் திருமதி துரைசிங்கம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி, தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றது.

இவ்விழாவிற்கு யாழ் மாவட்ட கலை பண்பாட்டு கழக மகளிர் பொறுப்பாளர் செல்வி கலைமணி தலைமை தாங்கினார்,

வரவேற்புரையை யாழ் மாவட்ட கலை பண்பாட்டு பொறுப்பாளர் குமணன் நிகழ்த்தினார், தலைமைஉரையைத் தொடர்ந்து சிறப்புரையை திரு. காந்திதாசன், யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் தணிகைச் செல்வி, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக நன்றியுரையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

(இ),(பா)

## மீள்பதிவு விண்ணப்பம்

(நவாலி)

யாழ். பல்கலைக்கழக அடுத்த கல்வியாண்டினை புதுப்பிப்பதற்கான ''மீள்பதிவு'' விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக் கழக பரீட்சைக் கிளை வழங்கி வருகிறது. (05)


இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

மகாத்மா நெல்லியடி

தெய்வேந்திரா சாவகச்சேரி

ஆகிய திரை அரங்குகளின்
அகன்ற திரையில்

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக்
கழகம் வழங்கும்

கே. ஏ. அன்ரனியின்

"எல்லைக்கற்கள்"

(வர்ண முழு நீளப் படம்)

தினசரி 6. 30

சனி, ஞாயிறு - 10. 30, 2. 30, 6. 30

(சி-10858)


## பதவி வெற்றிடம்

தமிழ் மொழி மூலமான பயிலுனர் ஆசிரியர்

# ஆட்சேர்ப்புப் பரீட்சை 31-ம் திகதி நடைபெறும்

(நல்லூர்)

தமிழ்மொழிமூல பயிலுனர் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண நகரத்திலுள்ள ஐம்பத்திரண்டு பரீட்சை நிலையங்களில் நடைபெறஉள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இப்பரீட்சையை நடாத்துவதற்குரிய பரீட்சை ஆவணங்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்தது. பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் நேற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிப்பதற்காக யாழ் கல்வித்திணைக்களத்தினால் யாழ் பிரதம தபாலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும்30ஆம்திகதி வெள்ளிக்கிழமை யாழ் கல்வித் திணைக்களம் வலயம்1 உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்கல்வி வலயம்1இற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கு பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களாகவும் நிரந்தர நோக்குனர்களாகவும் நியமிக்கப்பட்டவர்கள் மேற்கூறிய பரீட்சைக்குரிய ஆவணங்களை நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கல்வி வலயம் 1இல் வந்து சேகரித்துச் செல்லுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இப்பரீட்சை இன்று நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட போதிலும் பரீட்சை ஆவணங்கள் உரியநேரத்தில் வராததனால் தற்போது 31-12-94 இல் நடைபெறஉள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்கு மொழித் திறன், பொது அறிவு, பொது உளச்சார்பு ஆகிய பாடங்கள் இடம்பெற உள்ளன. (17)

# பளை கோட்டத்தினருக்கு கிளிநொச்சியில் பரீட்சை

(தென்மராட்சி)

எதிர்வரும்31-ம்திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் பயிலுநர் ஆசிரியர் பரீட்சைக்கு பளைக் கல்விக் கோட்டத்தில் இருந்து பளை மத்திய கல்லூரி நிலையத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு பரீட்சை கிளிநொச்சியில் நடைபெறும் எனவும் அவர்களுக்கு உரிய அனுமதி அட்டைகள் கிளிநொச்சியில் இருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. சி. கமலநாதன் பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினத்திற்கு அறிவித்துள்ளார்.

எனவே பரீட்சார்த்திகள் கிளிநொச்சி சென்று பரீட்சையை எழுத ஆயத்தமாகுமாறு கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(86)

### 2ஆம் கட்டப்

பொறுத்தே இறுதி முடிவு எடுக்கப்படும் என அறிய வருகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெற்ற முதலாம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாகவும் யாழ். குடாநாட்டிற்கு மின்சாரம் வழங்குவது குறித்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதனடிப்படையில் தற்போது இரு இராட்சத மின் உற்பத்தி இயந்திரங்களை யாழ். அனுப்புவதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் இவை இரண்டாம் கட்ட பேச்சு முடிவடைந்த பின்னரே அனுப்பிவைக்கப்படும் என அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

### யாழ். செல்லும்

சுக்களின்போது நாட்டின் பொருளாதார நிலைவரங்கள் குறித்தே ஆராயப்பட்டதாக

## லூஷியன் ராஜினாமா

சிறிலங்கா சுற்றுலாத்துறையின் இயக்குனர்கள் சபையிலிருந்து பிரபல பத்திரிகையாளர் லூஷ்யன் ராஜகருணாநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

சுற்றுலாத்துறையின் அதிகாரி ஒருவரின் பதவி விலக்கல் சம்பந்தமாக இவர் இராஜினாமா செய்துள்ளதாக தெரியவருகின்றது.

### போர்

பிரதேசங்களில் புலிகளும், இராணுவத்தினரும் எவ்வாறு நடந்துகொள்வது? யுத்த நிறுத்த சூழல் ஒன்றில் இவ் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் புலிகளை அனுமதிப்பது - அவர்கள் ஆயுதங்களுடன் வந்தால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் - இவற்றில் பிற தமிழ்க் குழுக்களின் நிலைப்பாடு.

ஆகிய விடயங்கள் ஆராயப்பட வேண்டும் என இராணுவ ஆய்வாளரும், இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வரு

### எமக்காக

டைய உதவியையும் பெற்றுக் கொள்வது பிழையான காரியமாக அமையாது. இதனை உலக சரித்திரம் புலப்படுத்தி இருக்கிறது. சீன-இந்திய யுத்தத்தின் போது இந்தியா அமெரிக்காவின் உதவியைப் பெற்றது என ஜே. ஆர். பதிலளித்தார்.

1957-ம் ஆண்டு பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து நான் கண்டியாத்திரை சென்றதற்கு காரணம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சர்வசன வாக்கெடுப்பு இன்றி இணைக்கப்பட்டமையே ஆகும். முப்பது ஆண்டுகளின் பின் உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது என்று மேலும் அவர் கூறினார்.

### ரத்வத்த

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்கள்



தோற்றம்
24 - 09 - 1931

மறைவு
25 - 12 - 1994

## அருணாசலம் நாகராசா
(மல்லப்பு மாஸ்டர், சோதிடர்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடி வண்ணார்பண்ணையில் வசித்துவந்தவரும், முன்னாள் ஸ்ரீராஜ் ஓட்டோ மொபைல் இஞ்சினியரிங் நிர்வாகியும், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளருமாகிய அருணாசலம் நாகராசா 25-12-94 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 25-12-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இல.549, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி இல்லத்தில் நடைபெற்ற தென்பதை அறியத் தருகிறோம்.

தகவல்.

மனைவி, பிள்ளைகள்

(10514)

## முத்தையா திருநாவுக்கரசு
(S.L.A.S, B.A. உதவித்தேர்தல் ஆணையாளர் புத்தளம்)

ஊர்காவற்றுறை தம்பாட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பருத்தித்துறை ஐயனார் வீதியைச் சேர்ந்த முத்தையா திருநாவுக்கரசு (உதவி தேர்தல் ஆணையாளர், புத்தளம்) காலமானார். இவர் புவனேஸ்வரியின் (ஓய்வு பெற்ற புள்ளி விவரவியலாளர்) அன்புக்கணவரும் பார்த்திபன், பகிரதன் (ஹாட்லிக் கல்லூரி), கார்த்திகா (வட இந்து மகளிர் கல்லூரி), கார்த்திகேயன் (வேலாயுதம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் (யாழ். பல்கலைக்கழகம்) மைத்துனரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

திருமதி வி. ராஜேஸ்வரி
(மைத்துனி).

(9871)



எமது ஸ்தாபனத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து நேர்முகம் காணல் 31-12-94 சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு நடைபெறும். நேர்முகம் காணலுக்கு வரும்போது தராதரங்களை நிரூபிக்கும் சகல ஆவணங்களுடன் சமுகந்தரவும். (ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது)

1. கணக்காளர்
2. கொள்வனவு உத்தியோகத்தர்
3. களஞ்சியக் காப்பாளர்
4. சிட்டை எழுதுநர்
5. விற்பனையாளர்

**அம்பிகை களஞ்சியம்**
**110, மருத்துவமனை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(10515)

உ.

# தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

**அன்புடையீர்!**

நிகழும் பவ ஷு மார்கழி மீ 4-ம் நாள் (19-12-1994) திங்கட்கிழமை இரவு 7. 00 மணியளவில் பரமபதமடைந்த

**பிரம்மஶ்ரீ தியாகராஜஐயர் இலட்சுமிகாந்த சர்மா (காந்தம் ஐயர்)**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 28-12-1994 புதன்கிழமை முதல் எங்கள் இல்லத்தில் நடைபெறும்.

28-12-94 புதன்கிழமை தசாகம் காலை 10. 00 மணிக்கு.
29-12-94 வியாழக்கிழமை இடபதானம், ஏகோதிஷ்டம், மாசியம்.
30-12-94 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்.
31-12-94 சனிக்கிழமை கிருகயக்ஞம்.

உறவினர்கள், நண்பர்கள் இவ்வைபவங்களில் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி தி. ல. காயத்திரிதேவியும்,
பிள்ளைகளும்

"சிவானந்த கிரி"
முருகேசபண்டிதர் வீதி,
சுன்னாகம்.

(10523)

பொருளாதார நிலைவரங்கள் குறித்தே ஆராயப்பட்டதாகவும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

## அரச

பிரிட்டனுக்கு ஒரு வருட இராணுவ பயிற்சிக்காக சென்றுவிட்டதையடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## வடபகுதிக்கு

லகத்தில் பதிவு செய்யப்படாமலோ அல்லது ஒப்படைக்கப்படாமலோ இருக்கும் பட்சத்தில், அவ் ஊர்திகள் வைத்திருப்போர்மீது தமிழீழக்காவல் துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட ஊர்திகளும் கையகப்படுத்தப்படும் என்பதையும் பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

ஆய்வாளரும், இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யுத்தநிறுத்தம் தொடர்பான நடைமுறை விபரங்கள் உள்ளடக்கிய ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதில் இரு தரப்பும் கைச்சாத்திட வேண்டுமென இராணுவத் தரப்பு கருதுவதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## சந்திரிகாவை

இச் சந்திப்பு தனக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமையை தீர்ப்பதற்கு வழிவகுக்கும் என தான் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பேச்சுவார்த்தையில்

யாது என்றும் சமாதான முயற்சியில் இராணுவ அதிகாரி ஒருவர் பங்குபற்றுவது இராணுவ மட்டத்தில் பின்னதாக பல அசௌகரியங்களை கொண்டுவரும் என்றும் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சில் கலந்து கொண்டுவிட்டு பின்னர் சில சமயம் போர் வெடித்தால் இராணுவத்தை போர்க்களத்தில் எப்படி தாம் முன்னின்று நடத்திச்செல்ல அருகதையுடையவர்களாக இருப்போம் என்றும் இராணுவ பிரிகேடியர் மட்டத்தில் அச்சம் நிலவுவதாகவும், தமக்கு எதிராக சிப்பாய் ஒருவரின் குண்டு கூட பழிவாங்கும் செய்கையாக போர்க்களத்தில் திருப்பிவிடப்படலாம் என்றும் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக 'சண்டே ஒப்சேவர்' தெரிவித்துள்ளது.

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரத்வத்த முன்னர் கொழும்பில் இராணுவத்தில் பணியாற்றியவேளை கொழும்பில் இருந்த மூத்த இந்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவருடன் கொண்டிருந்த உறவு இன்னமும் அவருடன் நீடிப்பது குறித்து விடுதலைப் புலிகள் அமைச்சர் மீது கோபம் கொண்டுள்ளதாக சண்டே ஐலண்ட் தெரிவித்துள்ளது.

## திருமலை

நிற்பதனால் சிறிலங்கா கடற்படையினரும் உசாரடைந்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் கனரக ஆயுதங்கள் சகிதம் அக்கப்பல் நோக்கிச் சென்ற கடற்படையினர் கப்பல் குறித்து விசாரணை நடத்தினர். அதன்போது துறைமுக அதிகார சபையினால் வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களை அதிகளவில் வழங்கும் ஒரு கம்பனிக்குச் சொந்தமான மேற்படி கப்பல் மேலிட உத்தரவிற்காக திருமலைக் கடலில் தரித்து நிற்பது தெரிய வந்தது.

துறைமுக அதிகார சபை புதிய கப்பல்களை வாடகைக்கு அமர்த்த வெளியிட்ட கேள்விப்பத்திர கோரலை தொடர்ந்து அக்குறிப்பிட்ட சென்னை கம்பனி மேற்படி கப்பலை திருமலை அனுப்பி வைத்திருந்தது.

## ரஷ்ய

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 16 கோடி ரூபா கேள்விப்பத்திர கோரல் பாதுகாப்பு அமைச்சால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



# திருமதி பரமேஸ்வரியம்மா
## மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்கள்

திருமதி பரமேஸ்வரி அம்மா மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்கள் நேற்றுக் காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமசாமிக் குருக்கள், திருமதி சொர்ணாம்பிகையம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டேய ஐயர், செல்வநாயகியம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், புங்குடுதீவு கிராஞ்சியம்பதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தா மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும், திருமதி லோகேஸ்வரி நாகேந்திரக் குருக்களின் அன்புத் தாயாரும், புங்குடுதீவு சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்களின் (சின்னமணி ஐயா) அன்பு மாமியாரும், அருணோதய சர்மா, கர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார் இவர் ஸ்ரீனிவாசகுருக்கள் சாரதாம்பாள் தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார். சிவஸ்ரீ சிவராமலிங்கக் குருக்கள் (கைதடி), காலஞ்சென்ற கெங்காதரக் குருக்கள், சிவஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் (அனலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரம்மஸ்ரீ கந்தசாமிஐயர் (ஊரெழு) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் (இணுவில் , திருமதி அமிர்தாம்பிகையம்மா சிவராமலிங்கக் குருக்கள், திருமதி விசாலாட்சியம்மா கெங்காதரக் குருக்கள், திருமதி சசிகலா கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:
138, கிராமவிஸ்தரிப்பு திட்டம், திருநெல்வேலி.
திருமதி லோகேஸ்வரி நாகேந்திரக் குருக்கள்

(சி-11031)